
www.tamilarangam.net

SARVADESA TAMILER

# சர்வதேசதமிழர்

தமிழர்களை முன்னேற்றம்,ஐக்கியம் கருதி ஒன்றிணைக்கும் நோர்வே தமிழ்ச்சஞ்சிகை!

Norway Tamil magazine to co-ordinate the Tamils for advancement & Solidarity!










முபாரக் அலி






கைதடி. படுகொலைச் சம்பவங்களில் கொல்லப்பட்ட மாணவி குமாரசாமி கிருஷாந்தி, அவரது தாயாரும் கல்லூரி பிரதி அதிபருமான குமாரசாமி இராசம்மா, சகோதரனும் மாணவனுமான குமாரசாமி பிரணவன் ஆகியோரையே மேலேயுள்ள படங்களில் காண்கிறீர்கள். (நன்றி : வீரகேசரி)



www.tamilarangam.net

## சிறப்பாசிரியர் உரை

எம் தாயகமான இலங்கையில் நடப்பது எல்லைப்போரோ, அன்றி சமயப்போரோ அல்ல. உலகில் மதங்களை மையப்படுத்தி நடைபெறும் போர்களே அதிகம். பல வெள்ளை வெளிநாடுகள் இந்து,புத்தமதப் போராகச் சமிக்கை (சமிஞ்ஞை) காட்ட முயற்சிக்கின்றன. ஆனால் உண்மையில் அங்கு நடைபெறுவது கிட்லர் நடத்திய 2ம் இரண்டாம் உலகமகாயுத்தம் போன்ற இனத்துவேசப் போர். இரண்டாவது மகா யுத்தில் கோடானுகோடி மக்கள் இறந்தார்கள். ஆனால் ஆலயங்கள், வைத்தியசாலைகள்,பாடசாலைகள் போன்வைகளுக்குக் குண்டுபோடவில்லை. இவ்வகையில் கிட்லர் ஒருபடிமேலேதான் நிற்கிறான். இதை ஐரோப்பிய சமூகம் ஏற்க மறுக்கிறது. காரணம் இலங்கை ஒருசிறிய தீவு வெள்ளை நிறத்தில் இல்லாதவர்,அதுவும் மூன்றாம் உலகநாடு எனகருதுகிறாகளா? ஐரோப்பாவை கிலிப்படுத்திக் கொண்டிருந்தவன் கிட்லர், அணுக்குண்டு போடப்பட்டிருக்க வேண்டியது ஜேமனிக்கே! கிட்லரை வெருட்டுவதற்கு குண்டு போட்டதோ யப்பானில்.ஏன்..? அழியப்போவது வெள்ளை இனத்தவர் இல்லை என்பதாலா? இதை இனத்துவேசம் என்பதா....? சுயநலம் என்பதா..?

யூகோஸ்லாவியாவிலும், ஆப்கானிஸ்தானிலும் ஒரேவேளையே சோவியத்யூனியன் வெளியேறியது. அதே வேளையே போரும் ஆரம்பித்தது. ஆனால் வெள்ளையர்கள் கவனமும், ஆதரவும், சமாதான உடன்படிக்கைகளும், யு.என் தலையீடும் யூகோஸ்லாவியாவிலேயே இருந்தன. காரணம் என்ன? நிறமா? இப்போருக்கு முன்பே ஆரம்பிக்கப் பட்டதும், பாரிய மனிதாபிமான அழிவுகளைக் கொண்டும் இருந்தது எமது தாயகப்போர். 500,000 தமிழர்கள் அகதியாகி உணவு, உடை, உறையுள் எதுவுமின்றி தெருவினிலே நின்றபோதும் கூட கண்மூடிக்கிடந்தன இந்த வெள்ளை வெளிநாடுகள்! இதை என்னவென்பது?

போஸ்னியருக்கு முன்பே நோவேக்கு அகதியாக வந்தவர்கள் தமிழர்கள். ஆனால் போர் அங்கே முடிந்தபின்பும் எந்தவித கட்டுப்பாடுகளும் இன்றி எவ்வளவு காலமும் இருக்கலாம்! என அனுமதி பெற்றவர்கள் யார்? கதறக்கதறத் திருப்பியனுப்பப் பட்டவர்கள் தமிழர்கள்.காரணம் நிறமா..?

இப்படியான பல கசப்பான அனுபவங்கள், இவர்களை இனத்துவேசிகள் எனத்தூற்றச் சொல்கிறது. சட்ட ஒழுங்குகளின் படி நடந்த முடிபுகள் எமக்குச் சாதகமாக அமையாதபோது உடன் இனத்துவேசி என்கிறோம். 400 நோவேயியச் சிறுவர்களுக்குச் சிறுவர் பூங்காவில் இடமில்லாமல் தவிக்கிறார்கள். எம்மவரின் பிள்ளைகளுக்கு இடம் கிடைத்தும் வீட்டுக்கருகில் மாற்றி உடன் தரவில்லை என்றதும் இனத்துவேசி! என ஏசுகிறார்கள். இப்படியான நிலைமைகளுக்குத் தாழ்வு மனப்பான்மையே காரணமாகும்.

நோவேயியர்களின் கருத்தில் கிட்லர் போன்று இனங்களைத் துவேசித்து அழிப்பவர்களும், அழிக்க முயல்பர்களுமே துவேசிகள். எமது நாட்டுக்கோ அன்றி எமக்கோ உதவி செய்யவில்லை என்றால் எப்படி இவர்கள் இனத்துவேசம் கொண்டவர்கள் ஆகமுடியும்? இந்த நாடு வறுமையாய் கஸ்டப்பட்ட காலங்களில், கிட்லர் கொன்று தள்ளிய காலங்களில், அன்னியப் படையெடுப்புக்களின் போது நாமோ அல்லது எமது நாட்டவர்களோ நோர்வேக்கு உதவி செய்தோமா? இல்லையே... இவர்கள் தாம்பூலம் வைத்து இங்கு அழைத்தார்களா? அதுவுமில்லையே.

இரண்டாவது உலகமகாயுத்தத்தின் போது நாட்டு எல்லைகளைக் காப்பதற்காய் துப்பாக்கி சுமந்தவர்கள் துயில்வதற்கு இடமின்றித் தவிக்கும் வேளையும் எமக்கு ஆதரவுதந்தவர்களுக்கு நன்றிக் கடனாக இல்லாவிட்டாலும் புண்படுத்தாமல், தூற்றாமல் இருந்தால் போதும். எதற்காக இவர்கள் எமக்கு உதவி செய்ய வேண்டும்? எமக்கு ஏதாவது தருமதி உண்டா? இல்லையே. அகதிகளையோ வெளிநாட்டவர்களையோ நாம் எடுக்கமாட்டோமென இவர்கள் கருதினால் யாரும் தடுக்க இயலாது. யு.என் இல் இருந்து வெளியேறுவார்கள். அதுவும் இவர்களுக்கு நன்மையேதான். யு.என் க்குக் கொடுக்கும் பணமும் மிச்சம்தான்.யு.என் கொடுக்கும் பணம் மூக்குப் பொடிக்குப் போதாது.

**நாம் இந்தநாட்டுக்குச் செய்யக்கூடிய நன்றிக்கடன் சட்டதிட்டங்களுக்குப் பணிந்து நடப்பதும், இந் நாட்டில் விசுவாசமாக இருப்பதுமேயாகும். மாடு இறந்ததும் உண்ணி களன்று விடுவது போன்ற எண்ணங்களை விட்டு விடுவது நல்லது. நாய்க்கு இருக்கும் நல்ல குணமாவது மனிதனுக்கு இருக்கவேண்டும். நீங்கள் நாட்டில் பட்ட கஸ்டங்களை சிறிது எண்ணிப்பாருங்கள்.**

***சிறப்பாசிரியர் தி.திலீபன்***


தமிழ்ச்சங்கங்கள்,எழுத்தாளர்கள்
சிறப்பாசிரியராக,சிறப்பிதழ்
வெளியீட உடன் தொடர்புறுக!



நோர்வேயில் தமிழ்மாதசஞ்சிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.பதிவு இல:90/310-ரி.1.எஸ்.சர்வதேசதர தொடர்இலக்க நிலையம் யுனெஸ்கோ,பாரீஸில் பதிவுசெய்யப்பட்டது.இல.0805-7443.கணணியால் பிழையின்றி எழுதிய ஆக்கம் உடன் பிரசுரமாகும். தரமான ஆக்கங்கள்,ஓவியங்கள்,புகைப்படங்கள்,காட்டூன்கள் மாதாமாதம் அனுப்புவோர்க்கு இலவசசந்தா உண்டு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இஸ்தாவன்கர்
# நோர்வேயின் பெற்றோலியத் தலைநகர்

இஸ்தாவன்கர் நோர்வேயின் நான்காவது பெரியநகராகும். தலைநகர் ஒஸ்லோவிலிருந்து 580 கிலோ மீட்டர் தூரத்தில் தென் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. 150 வருடங்களுக்கு முன்பு, அதாவது 1806 ம் ஆண்டு இந் நகரத்தின் சனத்தொகை 2500, ஆனால் இன்றைய சனத்தொகை ஒரு இலட்சத்திற்கு மேலாகும்.

1800 ஆண்டிலிருந்து 1850 ம் ஆண்டுவரை சில்மீன் ஏற்றுமதி (Sildehandel) நோர்வேயின் பொருளாதார வளர்ச்சியில் மிக முக்கிய இடத்தை வகித்தது. 1850 ம் ஆண்டிற்குப் பின் சர்வதேசக் கப்பல் போக்குவரத்து, சரக்குக்கப்பல் போக்குவரத்துத் தொழில் வளர்ச்சி அடைய ஆரம்பித்தது.

1880 ம் ஆண்டிலிருந்து மறுபடியும் மீன்பிடித்தொழிலில் மூலமாக இஸ்தாவன்கரின் பொருளாதாரம் முன்னேற்றமடைய ஆரம்பித்தது. இந்நிலை 1914 ம் ஆண்டுவரை நீடித்தது. இக்கால கட்டத்தில் இஸ்தாவன்கரில் வாழ்ந்த 50 வீதமானோருக்கு மேற்பட்டோர் மீன்பிடி, மீன்பதனிடும் தொழிலுடன் தொடர்பான தொழிற்சாலைகளில் வேலை செய்தார்கள். 1915 ற்கும் 1960 ற்கும் இடைப்பட்ட காலத்தில் முதலாம், இரண்டாம் உலகமகாயுத்தங்களுக்குப்பின் இஸ்தாவன்கரின் பொருளாதார நிலைமை குறிப்பிடக் கூடியளவு முன்னேற்றகரமாக இருக்கவில்லை.

1970 ம் ஆண்டுக்கு முன்பு மீன்பிடித்தொழிலில் இஸ்தாவன்கர் மிக முக்கிய இடத்தை வகித்தது. அப்போது சார்டீன்மீன் தொழிற்சாலைகள் அநேகமானோருக்கு வேலைவாய்ப்பை வழங்கியது. தகரத்தில் அடைக்கப்பட்ட சார்டீன்மீன் உற்பத்தியும், ஏற்றுமதியும் நோர்வேயிற்குப் பிரதான வருமானத்தைத் தேடித்தந்தது.

1965 ம் ஆண்டு இஸ்தாவன்கருக்கு அண்மையில் வடகடலில் (North Sea) பெற்றோல் கிடைக்கக்கூடிய அறிகுறிகள் கண்டுபிடிக்கப்பட்டது. அதன்பின் மேற்கொள்ளப்பட்ட பல பரிசோதனைகளில் பெற்றோலும், வாய்வும் (Gas) பாரியளவு காணப்படுவது உறுதிப்படுத்தப்பட்டது. 1970 ம் ஆண்டளவில் பெற்றோலிய உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டபின், நோர்வேயின் பொருளாதார நிலமையில் பெரும் வளர்ச்சி உண்டாக ஆரம்பித்தது. அத்துடன் வேலைவாய்ப்பும் கணிசமானளவு ஏற்பட்டதால், வெளிநாடுகளிலிருந்தும் பலர் வேலைக்காக வந்து சேர்ந்தார்கள்.

தற்போது இஸ்தாவன்கரில் சுமார் 80 நாடுகளைச்சேர்ந்த 8000 க்கு மேற்பட்ட வெளிநாட்டவர்கள் வாழ்கிறார்கள். 100 க்கு மேற்பட்ட பெற்றோல் உற்பத்தி, மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட பல சர்வதேச நிருவனங்கள் இங்கிருந்து இயங்குகின்றன. நோர்வேயின் பெற்றோல்வள உற்பத்தியிலும் அதன் அபிவிருத்தியிலும் இஸ்தாவன்கர் ஒரு முக்கிய இடத்தை வகிப்பதால், இந்நகரத்தை நோர்வேயின் பெற்றோலியத் தலைநகர் எனவும் அழைக்கப்படுகிறது.

இஸ்தாவன்கரில் பலநாட்டு மக்களும் வாழ்வதால், அதனைச் சர்வதேசநகரம் என்றும் பலர் அழைப்பதுண்டு. சமுதாய விடயங்களில் இங்கு வாழும் வெளிநாட்டவர்களின் பங்களிப்பும் அதிகரித்து வருகிறது. சென்ற வருடம் நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வெவ்வேறு நாடுகளைத் தாயகமாகக் கொண்ட ( இங்கிலாந்து, குருதிஸ்தான், இலங்கை, கொலம்பியா, வியத்னாம் ) ஐந்துபேர் இஸ்தாவன்கர் மாநகரசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

சர்வதேசப் போக்குவரத்து -இஸ்தாவன்கர் துறைமுகத்திலிருந்து இங்கிலாந்து, டென்மார்க் போன்ற இடங்களுக்குச் சென்றுவர கப்பல் சேவைகள் உள்ளன. அத்துடன் சர்வதேச விமானநிலையம் சூலாவிலிருந்து உலகத்தின் பல பாகங்களுக்கும் சென்றுவர விமானசேவைகள் தொடர்பும் உண்டு.

படத்தில் காணப்படும்- மலையில் மூன்று வாள்கள் (Sverd i fjell) இஸ்தாவன்கரில் உள்ள ஹாப்ஷ்பியூர் பகுதியிலுள்ள மொல்லபுக்த எனுமிடத்தில் உள்ளது. இது 900 ம் ஆண்டில் இவ்விடத்தில் நடைபெற்ற யுத்தங்களையும், அதன் மூலம் நோர்வே ஒன்றிணைக்கப்பட்டதையும் 9,2 மீட்டர் உயரமான இச் சின்னம் ஞாபகப்படுத்துகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நோர்வேயும் ஐரோப்பிய பொருளாதார ஒப்பந்தமும்

ஐரோப்பியயூனியனில் சேர்வதில்லை, என நோர்வேமக்கள் தீர்ப்பளித்தாலும்,ஐரோப்பாவுடனான தொடர்பு ஐரோப்பியபொருளாதார ஒப்பந்தத்தால் மேலும் நெருக்கமடையவே செய்கிறது. ஐரோப்பிய சந்தையில் ஐரோப்பிய போட்டியாளர்களுடன் சம உரிமையுடன் போட்டிபோட இந்த ஒப்பந்தமே வழிவகுக்கிறது. மத்திய,கிழக்குஐரோப்பிய நாடுகளுடனான பரந்தஒத்துழைப்புக்கும் இந்த ஒப்பந்தம் வழிகோலுகிறது. ஐரோப்பியயூனியனுக்கும்,அமெரிக்காவுக்குமிடையிலான புதியஒத்துழைப்புகள் நோர்வேக்கும் புதிய சவால்களைத் தரலாம்.

நோர்வே பொருளதாரத்துக்கும்,நல்வாழ்வுக்கும் சர்வதேசரீதியான ஒத்துழைப்பு அவசியம்.எனினும் நோர்டிக்நாடுகள்,ஐரோப்பியநாடுகளுடனான அரசியல்பொருளாதாரஉறவுகள் மிக மிக அவசியமானதாகும்.

நோர்வே மொத்ததேசியஉற்பத்தியில் 40வீதம் ஏற்றுமதி செய்யப்படுவதால்,இங்கு தேவையான பொருட்கள், சேவைகளை இறக்குமதி செய்ய இது உதவுகிறது.உயர்வாழ்வுத் தரத்துக்கு இது மிக முக்கியம். சுவீடன்,பின்லாந்த்,ஒஸ்ரியா உட்பட ஐரோப்பியநாடுகட்கு 75 வீதமான ஏற்றுமதி போவதும்,70வீத இறக்குமதி அங்கிருந்து வருவதற்கும் காரணம், புவியியல்ரீதியான அண்மையும்,கலாசார,பாரம்பரியஒற்றுமையும் ஆகும்.

2ம்உலகயுத்தத்தின்பின் சுதந்திரவர்த்தகக்கொள்கை பரந்துவளர்வதால் சர்வதேச ஒத்துழைப்பு வளர்ந்து வருகிறது.ஐரோப்பிய சுதந்திரவர்த்தக ஒப்பந்தம் தனியே வர்த்தகம் பற்றியே கருதும்.ஆனால் ஐரோப்பிய யூனியன் ஒப்பந்தம் அரசியல்நோக்கையும் கொண்டது.

வர்த்தகதடைகளையும்,சுங்கவரிகளையும் குறைத்து நியாயமான உட்சந்தையை உருவாக்குவதே இந்த ஒப்பந்தத்தின் அடிப்படை நோக்கு. 1.1.94 ல் இருந்து 18நாடுகள் கொண்ட ஐரோப்பியபொருளாதார ஒப்பந்த நாடுகள் உட்சந்தையை உருவாக்கியுள்ளன.

1995ல் உலோகம்,கடதாசி,தொழிற்சாலை—உற்பத்திகள்,மீன்,உரம்,தளவாடம் என பாரம்பரிய ஏற்றுமதியால் 143 பிலியன்(மிலியாடர்)குரோணர் வருமானம் நோர்வே பெற்றது. பெற்றோலிய எண்ணை,வாயு ஏற்றுமதியும் சேர்த்தால் வருமானம் 266 பிலியன் ஆகும்.

சிறிய,பெரிய நாடுகள் அல்லது கம்பனிகள் என வேறுபாடின்றி நால்வகை சுதந்திரங்களும்—பொருட்கள், சேவைகள்,முதலீடு,தொழிலாளர்—சம சந்தைவிதிகளுடன் அசைதல் இங்கு முக்கியம் பெறும்.முற்றான வேலைவாய்ப்பு,வாழ்க்கைதரஉயர்வு தொழில்நிலைமை உயர்வு என்பன கவனத்துக்கு எடுக்கப்படும். பொருளாதார,சமூக,பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்படலும் இங்கு கவனத்துக்குள்ளாகும். சூழல்பாதுகாப்பும் மிகக்கவனமாக கையாளப்படும்.

1970ல் ஏற்பட்ட எண்ணைப்பிரச்சனை காரணமாக மேற்கு ஐரோப்பாவில் பொருளாதாரவீழ்ச்சி ஏற்பட்டது.தத்தம் தொழில்துறையை பாதுகாக்க பலநாடுகள் புதியவிதிகளை அறிமுகம் செய்தன.இதனால் பொருளதார,சமூகபிரச்சனைகள் அதிகரித்தன.ஐரோப்பியகம்பனிகள் போட்டித்தகுதியை இழந்தன.பல மிலியன் வேலைகள் இழப்பாகின. அமெரிக்கா,யப்பானுடனான போட்டியை வெல்ல புதியபொருளாதாரநோக்கு தேவை என உணரப்பட்டது. இதற்கு முன்னோடியாக ஐரோப்பிய உள்சந்தையை தடைகள் நீங்கிய வலுவான சந்தையாக்குதல் முக்கியம் எனஉணரப்பட்டதே,ஐரோப்பிய யூனியன் ஒத்துழைப்புக்கு,காரணம் ஆகும்.அதேசமயம் சூழல்பாதுகாப்பு,ஆராய்ச்சி,கல்வி,சமூகவிடயங்கள் முதலானவற்றிலும் ஒத்துழைப்பை பலப்படுத்தப்பட்டுள்ளது.

வர்த்தகபொருளாதார நடைமுறைகட்கு ஐரோப்பிய பொருளாதார ஒப்பந்தம் வழிவகுக்கிறது எனினும், ஐயூனியன் அங்கநாடுகள்போல்,நோர்வே வெளிநாட்டு,பாதுகாப்பு,நீதி,பொலிஸ்துறை,மீன்பிடி,விவசாயகொள்கைகளில் கட்டுப்படாது. சுயாதீன கொள்கையை கொண்டிருக்கும். பிராந்தியஅரசியல்,பொருளாதார,பணகொள்கை,வரி—தீர்வை விடயங்களிலும் நோர்வே பங்கேற்காது.

ஐரோப்பியபொருளாதார ஒப்பந்தம், ஒருநோர்வேபிரசை,இந்தஒப்பந்தநாடுகளுக்கு சுதந்திரமாக பிரயாணம் செய்யவும்,வேலைதேடவும்,சுயாதீனமான தொழில்துறை தொடங்கவும் அனுமதிக்கிறது.மாணவர்,பென்சனியர்கள் இந்தநாடுகட்கு சென்று வாழவும் அனுமதிக்கிறது.ஆனால் இவர்கள் தம்மைத்தாமே பராமரிப்பவராயும்,சொந்தசுகவீனகாப்புறுதி உள்ளவராயும் இருப்பதுஅவசியம். 3மாதத்துள் ஒருவர் வேலைதேடிக் கொள்வாராயின் அவர் அந்தநாட்டில் தொடர்ந்து சீவிக்கலாம். அன்றேல் அவர்தன் சொந்தப் பணத்தில்,தொடர்ந்து அங்கு வாழலாம். 3மாதமும் தொழில்காப்புறுதிபணம் அங்கு அனுப்பப்படும்.

குடும்பத்தவரும் அங்குசென்றுவாழவும் உரிமையுண்டு. வேலை கிடைத்தவருக்கு 5வருடவதிவிட அனுமதி வழங்கப்பட்டு பின் தானாகவே புதுப்பிக்கப்படும்.அரசசேவையில் தொழில்தேடல்,பெறல் அந்தந்தநாட்டு பிரசைகட்கே உரியதாகும். பொலிஸ்,மிலிரறி,நீதிமன்று,அமைச்சு தொழில்கள் இவையாகும்.

சம்பள—தொழில்விதிகள் சகலருக்கும் பொதுவாகவே இருக்கும். இந்தஒப்பந்த நாட்டுக் கம்பனிகள் வேறொரு ஒப்பந்தநாட்டில் சேவை செய்யநேரிடின்,தம்நாட்டுதொழிலாளரை கூடவே எடுத்துச்செல்லலாம். அங்கு சமூகசேவை,காப்புறுதிசேவக்கும் அவர்கட்கு உரித்துண்டு. இந்த ஒப்பந்தவிதிகள் சுகவீனம், பிறப்பு,இயலாமை,வயதுமுதிர்ச்சி, துணைமறைவு,தொழில்காயம்,தொழிலால் வந்தசுகவீனம்,இறப்பு,வேலைஇழப்பு,குடும்பசுமை(பிள்ளைகட்குரியஉதவி)என பல்வேறு உதவிகளை வழங்கவழிகாட்டுகிறது. இந்த ஒப்பந்தநாடுகட்கு பிரயாணம் செய்பவர்க்கு உடனடிமருத்துவ உதவிக்கு உரித்துண்டு.நோர்வே காப்புறுதிக்கந்தோரில் இருந்து E-111 எனும் படிவத்தை எடுத்துச் செல்வது, பிரயாணத்துக்கு முக்கியம்.

அந்தந்த நாட்டு தொழிலாளர்களின் கல்வி,தொழில் தகுதியை ஒப்பந்த நாடுகள் பரஸ்பரம் அங்கீகாரம் செய்ய வழிவகுக்கப்பட்டுள்ளது. கல்விக்காலம்,பாடத்திட்டம் குறைவெனில் பரீட்சை,பயிற்சி வைத்து அங்கீகாரம் வழங்கப்படலாம். நோர்வேயில் தொழில்புரியவருவோர் நொஸ்க் மொழியில் திறமையாகி, பரீட்சையும் தேறவேண்டும்.ஆனால் இனப்பாகுபாடு காட்டமுடியாது. ஐரோப்பிய பொருளாதார ஒப்பந்தம் ஆசிய,ஆபிரிக்க,லத்தின்அமெரிக்க மக்களுக்கும் புதுஆலோசனை,வழிமுறையை காட்டுகிறது எனலாம்.

EØS-samarbeidet........N.S.Pirabu



சர்வதேசதமிழரில்,வரும் கதைகளின் சம்பவங்கள்,பெயர்கள் யாவும் கற்பனையே! வாசகர்கடிதங்கள் மிகமிக வரவேற்கப்படும்! ஆக்கங்களை மீள்பிரசுரம் செய்யின் இச்சஞ்சிகையை குறிப்பிடுக!தங்கள் விமர்சனம்,ஆலோசனைகள் நமக்கு வழிகாட்டும்! ஆக்கங்கட்கு ஆக்கியோரே பொறுப்பு. திருத்திவெளியிட ஆசிரியருக்கு உரிமையுண்டு. முகவரி மாற்றத்தை உடன் தருக!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஓர்தமிழ் முஸ்லீம் நண்பனுடன் . . . . !

உள்நாட்டுப் பரப்புகளையும், நோர்வேயிய கொடியையும் காவிச்செல்லும் புரோத்தன் சேவ் விமானத்த ாத்திற்கு புதிதாக வேலைக்குச் சென்றபோது முபாரக் அலியினுடைய தொடர்பு எனக்குக் கிடைத்தது. இவர் 1972ல் நோர்வேயிற்கு மீன்பிடி தொடர்பான படிப்பை மேற்கொள்ளுவதற்காக வந்தார்.படிப்பை முடித்துக்கொண்டு இலங்கையிலுள்ள சீநோர் என்னும் மீன் பதனிடும்,கப்பல் கட்டும் இலங்கை நோர்வேயிய கூட்டுஸ்தாபம் ஒன்றில் 74-76 வரை கடமையாற்றினார்.மீண்டும் மேற்படிப்பை மேற்கொள்ளும் முகமாக நோர்வேக்கு வந்தார். ஆணைக்கு இரண்டு\ஆஸ்திக்கு இரண்டு\என நான்கு பிள்ளைகளுடன் ஸ்தவாங்கரில் குடும்பமாக வாழ்ந்து வருகிறார்.

ஆளும் கட்சியான தொழிற்கட்சியில் பலகாலமாக அங்கத்தவராகி, இன்று மாநகர சபையில் உறுப்பினராகத் திகழ்கிறார். சமூகசேவையில் ஈடுபடும் ஓர் தமிழ் முஸ்லீம் என்ற பெருமையுடனும், நான் ஓர் யாழ்ப்பாணத்தான் என்ற குற்ற உணர்வுடனும் தொலைபேசி மூலம் பேட்டி எடுப்பதற்காகத் தொடர்பு கொண்டேன்.

கே: அகதிகளுக்குப் பொறுப்பாகவும், வெளிநாட்டவர் சார்பாகவும், அரசியலிலும் இருந்து வந்திருக்கி றீர்கள். வெளிநாட்டவர்கள் சந்திக்கும் பிரச்சனைகள் என்ன?

ப: எனக்கு எந்த விதமான பாதகமான அனுபவமும் கிடையாது.நோர்வேயிய மக்களுக்கு வெளிநாட் டவர்கள் பற்றிய அறிவும், அனுபவமும் மிகக் குறைவு.அதனால இவர்கள் சந்தேகிக்கிறார்கள்.ஒரு சில வெளிநாட்டவர்கள் தவறுதலாகச் செய்த குற்றங்களை வைத்து எல்லோரையும் ஒரேமாதிரியே எடை போடுகிறார்கள்.

கே: நோர்வேயியச் சட்டமும், மக்களும் துவேசம் கொண்டவர்களாக காணப்படுவதாகப் பலர் கருதுகி றார்கள் உங்கள் கருத்து...?

ப: இது இல்லை என்றே சொல்லவேண்டும். இருந்தாலும் பரந்து இல்லை என்றே எண்ணுகிறேன். அண்மித்த காலங்களில் வெளிநாட்டவர்கள் பெருந்தொகையாக வந்து சேர்ந்தனர். அதேவேளை வேலையில்லாத்திண்டாட்டங்கள், பொருளாதாரத்தின் வீழ்ச்சி போன்றவை, செய்தித்தொடர்பு சாதனங்களின் வெளிநாட்டவர் பற்றிய கருத்துக்குவிப்பு, வெளிநாட்டவர்களின் நடவடிக்கைகள், சில அரசியல்வாதிகளின் கண்மூடித்தனமானதும் பொறுப்பற்ற தன்மையும் நடவடிக்கைகளும் துவேச த்தை நோர்வேயிய மக்களிடையே தூண்டி விட்டிருக்கின்றன. இதற்கான எங்களது பங்களிப்பும் போதாது. இது நோர்வேயிய மக்களுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் இடையே உள்ள முதல்கட்டமான பிரச்சனையே. வெளிநாட்டவர்கள் கூடிக்கொண்டு வருவதனால் நோர்வேயியமக்களுடன் தொடர்பு கொள்ளும் வீதம் கூடும், இது துவேசம் குறைவதற்கு உசிதமான நிலையை ஏற்படுத்தும்.

கே: அப்படியாயின் ஒஸ்லோவில் துவேசம் குறைந்தல்லவா இருக்க வேண்டும்?

ப: [சிறிது மௌனம்] குழுக்களாகக் கூடித்திரிவது, சமூகத்துடன் ஒத்துப்போகாது, ஒத்துழைக்காது இருக்கும் தன்மை, வெளிநாட்டவர்கள் இங்கேவந்து டாம்பீகமாகத் திரியும் போது இங்கே உள்ளவர்கள் கஸ்டப்படும் போது ஏற்படும் ஆத்திரம், பொறாமை போன்றவை காரணமாக இருக்கலாம். இப்போது துவேசம் ஒஸ்லோவில் குறைந்திருப்பதாகத் தொலைக்காட்சி காண்பித்தது.

கே. வெளிநாட்டவர்கள் பாராளுமன்றத்திற்கு வருவதையோ, அரசியலில் ஈடுபடுவதையோ பல நோர்வே யியமக்கள் விரும்புகிறார்கள் இல்லை. காரணம் இவர்களுக்கு ஒருவருக்கு முக்கால் பிள்ளை என்ற வீதத்திலும் வெளிநாட்டு நிறமகனிதர்களான எமக்கு தலைக்கு 3 என்ற வீதப்படியே பிள்ளைகள் இருக்கின்றன. அதேவேளை குடியேறும் வீதமும் கூடிக்கொண்டு போகிறது. இதே விதத்தில் கூடிக் கொண்டு போனால் நாளை தங்களுக்கு எதுவுமே இல்லாது போய்விடும் எனவும், பாராளுமன்றத்தில் தமக்கு ஏற்றாப்போல் சட்டமிருக்காது எனவும் பயப்படுகிறார்கள். தாம் கஸ்டப்பட்டு உருவாக்கிய நாட்டை விட்டுக்கொடுக்க் முடியாது என எண்ணுகிறார்கள்

ப: அப்படிப் பயப்பட வேண்டிய அவசியமே இல்லை. நாம் அரசியல் போன்றவற்றில் ஈடுபட்டால் தான் எமது பிரச்சனைகளை உயர்மட்டங்களில் எடுத்துச் சொல்லலாம். அவர்களது பயங்களை நீக்குவதற் காகவாவது நாம் சமூகத்தில் வேலை செய்யவேண்டியவர்களாக உள்ளோம்.

கே: யாழ்ப்பாணத்து தமிழ் முஸ்லீம்கள் விரட்டியடிக்கப்பட்டார்கள் இது சரியா?

ப: இல்லை

கே: ஏன் இல்லை?

ப: பலகாலமாக அவர்கள் அங்கு வாழ்ந்து வந்திருக்கிறார்கள். தமிழுக்கும் , தமிழீழப் போராட்ட த்திலும் பங்கு பற்றியிருக்கிறார்கள்.அவர்களின் தாய்மொழி கூடத் தமிழ்தான்



தகவல் சேவை பலாபலன்களை வாசகர்களுடன் பகிரலாம்.சஞ்சிகை தொடர்ந்து பெற விரும்பினால் சந்தா தந்து பதியுங்கள்
உலக தமிழ்பத்திரிகை/சஞ்சிகைகள்,நூல்கள் மாற்றுத்திட்டத்தில் பங்குகொள்ளவிரும்பின் உங்கள்வெளியீட்டை அனுப்புக!
முகவரியுடன் அறிமுகமாகும்! சர்வதேச தமிழரையும் உங்கள் இதழில் முகவரியுடன் அறிமுகம் செய்ய மறக்கவேண்டாம் !

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கே: தமிழீழப் போராட்டத்தில் பங்கு பற்றினார்கள் என்றால் அரசஊர்வுபடைக்கு உதவியாக இருந்திருக்கிறார்கள். இன்று கிழக்கில் என்ன செய்கிறார்கள் என்று பாருங்கள். ஏகாதிபத்திபத்தின் கூலிப்படையுடன் கூடிநின்று எதிரிகள் போல் தமிழ்மக்களைக் கொல்கிறார்கள்! காட்டிக்கொடுக்கிறார்கள்.

ப: யாழ்பாணத்தில் கலைக்கப்பட்ட கசப்பான சம்பவம் அவர்களை இப்படிச் செய்யத்தூண்டியிருக்கலாம்.

கே: யாழ்நகரில் இருந்து வெளியேற்றப்பட்டதற்கு ஒற்றர்களாக அரசபடைக்குப் பணிபுரிந்தமை காரணமாக இருக்கலாமல்லவா?

ப: நான் அதை நம்பவில்லை. அப்படியிருந்தாலும் எல்லோரும் ஒரேமாதிரி இல்லையே!

கே: யாழ்பாணம் அவர்களினது பாரம்பரிய பூமி என்றீர்கள் அப்படியானால் ஏன் இருப்பிடத்தை விட்டு வெளிக்கிட்டீர்கள்? அந்த மண்ணை நீங்கள் நேசித்திருந்தால் யாருமே மண்ணை விட்டு வெளியேறியிருக்கவே கூடாது.

ப: நீங்கள் வெளிநாட்டுக்கு வரவில்லையா? இதுவும் அப்படியே!

கே: முஸ்லீங்கள், தமிழுக்குப் பாடுபட்டவர்கள், தாய்மொழியும், தமிழ் என்றெல்லாம் சொல்லீர்கள் எத்தனையோ நல்ல தமிழ் பெயர்கள் இருந்தும் மதம்சார்ந்த பெயர்களைத் தானே எல்லோரும் வைத்து முஸ்லீம் எனப் பட்டைசாற்றிக் கொள்கிறீர்கள்.

ப: நீங்கள் கஸ்டமான கேள்விகளாகவே கேட்டுக்கொண்டு வருகிறீர்கள் நாங்கள் மதத்தை அதிகமாக மதிப்பவர்கள். இந்தியாவில் சிலர் தமிழ்பெயர்கள் வைத்திருப்பதாக அறிகிறேன்.

கே: யாழ்பாணத்தை விட்டு முஸ்லீங்கள் துரத்துப்பட்டார்கள். கிழக்கில் புலிகளுக் கெதிராகவும், நிராயுதபாணியான அப்பாவித் தமிழ்மக்களுக்கு எதிராகவும், திக்கற்று, திசைமாறி, கதியற்று ஓடிவந்த பல தமிழ் இளம் பெண்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டிய சகோதரங்களான முஸ்லிங்கள் கொழும்பில் அவர்களை விபச்சாரத்திற்கு அழைப்பதும், ஈடுபடச்செய்வதும், விபச்சார ஏஜன்டுகளாக இருப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுகிறார்கள். இவையெல்லாம் நாளை முஸ்லீங்கள் அற்ற ஓர் தமிழீழத்தை அமைக்கவே வழிவதும். முஸ்லீங்களுடன் கூடிய தமிழீழம் அமைந்தால் இக்கசப்பான அனுபவங்கள் ஊர்க்குழப்பங்களைத் தொடர்ந்து ஏற்படுத்தலாமல்லவா?

ப: அப்படி நடந்திருந்தால் அது மிகமிகப் பாரதூரமான குற்றம். நாம் தமிழர்கள் என்ற முறையில் ஒற்றுமைப்படுவது முக்கியமானது. அதேவேளை மற்ற அனைவரும் நாம் தமிழர்கள் தான் என்பதை ஏற்றுக்கொள்வதும் முக்கியமானது.

கே: தமிழ் ஒரு திராவிடமொழி. திராவிடர் கட்டையான கறுத்த உருவம் கொண்டவர்கள். உருவத்திலும், பேசும் தமிழிலும், தமிழர் என்ற அடையாளத்தை இழக்கிறீர்கள். நான் கூடக் கட்டை என்ற ஒன்றும் பெயருமே என்னைத் தமிழனாக அடையாளம் காட்டுகிறது. பெயரில் கூட நீங்கள் உங்கள் தமிழன் என்ற அடையாளத்தை விட்டுக்கொடுக்க முயற்சிக்கலாமா?

ப: நாம் இதைப்பற்றி யோசிக்கவே இல்லை. இது யோசிக்க வேண்டிய ஒன்றும் கூடத்தான்

நேரமின்மை காரணமாக பேட்டியை நிறைவு செய்து கொள்கிறேம். அமைதியும், அடக்கமும் கொண்ட மெலிந்த கண்ணாடி போட்ட முபாரக் அலி மீசையில்லாத் தாடி மூலம் தான் ஒரு முஸ்லீம் என்பதையும், பண்பு பண்பாடுகள் மூலம் நல்ல மனிதர் என்பதையும் நிரூபித்துக் கொண்டார்.

ஒவ்வொரு இனமும் மொழியை வைத்தே வகைப் படுத்தப் பட்டுள்ளன. இன்று தாயகத்தில் நடைபெறும் போராட்டமானது வெறும் தமிழர்களுக்கு மட்டும் உரியபோராட்டமாக இல்லாது தமிழ் பேசுகின்ற இரு இனங்களுக்குரிய போராட்டம் எனக் கருதினால்தான் நாம் இணைந்து போராடலாம், இணைந்தும் வாழலாம். முஸ்லீங்கள் ஏறக்குறைய எல்லோரும் தமிழர்களே. சிங்களப் பகுதியில் வாழும் முஸ்லீங்கள் சரளமாகச் சிங்களம் பேசினாலும் வீட்டில் தாய்மொழியான தமிழையே பேசுகிறார்கள். எமது தேசத்தில் சிங்களப்பகுதியில் பலகாலம் வாழ்ந்த தமிழர்களின் பிள்ளைகள் தமிழே தெரியாமல் இருந்தார்கள். இவர்களுடன் ஒப்பிடும் போது நாம் எம்மாத்திரம் .1983ல் அடித்துக் கலைக்கப் பட்டபோதே புரிந்தது அவர்களுக்கு தமிழின் அருமையும் நாடு ஒன்று தேவை என்றும்.

83 கலவரத்தின் போது காங்கேசந்துறையில் வந்து கப்பலால் இறங்கி நின்று கொண்டு 'இது என்ன கொடூர வெய்யில் கொழும்பு எவ்வளவோ நல்லது அங்யே செத்திருக்கலாம் ' என ஆங்கிலத்தில் அருவெருத்துக் கொண்ட தமிழர்களையும், சிங்களப் பகுதிகளில் உயிரைக் கையில் கொண்டு ஓடும்போது தமது வீடுகளுக்குள் அடைக்கலம் கொடுத்த தமிழ் முஸ்லீம் சகோதரங்களையும் இவ்வேளையிலே எண்ணிப் பார்க்கிறேன்.

பேட்டிகண்டவர் : திருச்செல்வம் - தீலீபன்



இலாபநோக்கின்றி சேவைநோக்கில் ;பலரது அரசியல்,சமூக,சமய,கருத்துக்களைத்தாங்கிவரும் நடுநிலைச்சஞ்சிகை இது.
ஜனநாயகம்,மனிதஉரிமை,சுதந்திரம்,சமாதானம்,நீதியுடன் கூடிய தமிழர் முன்னேற்றம்,ஐக்கியம் கருதுவதே நம் பணி!
தமிழார்வலர்,எழுத்தாளர்,கல்லூரி,பொதுநூலகமுகவரிகள் தந்துதவுக! தகவல்சேவையில் உங்கள் நாட்டு விபரங்கள் பகிர்க!

www.tamilarangam.net

கௌரவ சர்வதேச இணைப்பாளர்கள்

பெயர்
நோர்வே:
தி.திலீபன் (ஒஸ்லோ)
கு.பாலதாஸ் (ஒஸ்லோ)
என். ஜெயதரன் (பேர்கன்)
ஐ. ரோயலா (பேர்கன்)
க. தியாகலிங்கம் (துரொண்கைம்)
அ.பாஸ்கரன் (ஸ்ரவங்கர்)
முபாரக்அலி (ஸ்ரவங்கர்)
ம. பஸ்ரியன் (கிரிஸ்ரியன் சாண்ட்)
பொன் சிவா (ஏககண்ட்)
கே. சிவராஜா (துரம்சோ)
இ.தியாகலிங்கம் (ஒஸ்லோ)
க.இரா. விஜய் (பேலவோக்)
க.சுரேஸ்கரன் (போட்ஸ்பியட்)
பா. பாலேந்திரன் (ஒஸ்லோ)

பிரிட்டன்:
செ.ஆனந்தவரதன்
ந.பாலமுரளி
திருமதி.த.மனோகரன்
மு.ஆறுமுகம்
கிருஷ்ணா வைகுந்தவாசன்
செ.நாகேந்திரன்

## சர்வதேச தமிழர் கவியரங்கு

**அமெரிக்கவெளிநாட்டமைச்சர் மடலின் ஆல்பிறைற்றுக்கு.....!**

ஐ.நா.சபையின் பாதுகார்குழுவில்
அமர்க்களமாக துள்ளி ஆடி
கை.நா அசைத்து—மார்கறினா—
கவிதை பாடி நடனமு மாடி
நைனா!—எப்படி— சுகமா?என்று
நசியும் பூட்றோஸ் காலியை சாடி
மைனாபோலே கண்ணையடித்து
மகாபதவியை கிளின்ரனும் தந்தார்!

மார்கறினா— கவிதைக்காடும்
மயங்கும் மனசு உமக்கும் உண்டு
பார் அறியா படுகொலைகள்!
பல்லாயிரமாய் அகதிகள்கூட்டம்
யார் தடுப்பார்? பள்ளிச்சிறுமியர்
சிங்களராணுவ முகாமை கடக்க
கற்பை இழந்து கதறிப் புதைவர்!
கேள்விகேட்க சென்ற உறவினர்

சேர்ந்தார்,புதைகுழி!கைதடிமுகாமில்
சேராதோமிவை உனதுசெவிகளை!
ஆர்வம்காட்டு,இலங்கைக்கொடுமை
ஆயிரம்—சமீரே— சேர்ந்த சரித்திரம்!
பார்!பார்!உடன்பார்!பேசிடு உடனே!
பத்திரிகையாளர்,தொண்டருதவியை
பார்எங்குமிருந்து அனுப்பிடு தாயே
பாரதநாடோ வாய்மூடி மௌனம்!

வவனியாவின் தடுப்புமுகாமில்
வதைக்கப்படுபவர் தமிழர்பலரும்
பவனியின் 2ம்யுத்தத்தில் யூதர்
பட்டஅவலம் தமிழரும் படுறார்
எவர்தான்மீட்பர்?கர்ப்பிணிபெண்கள்
ஏதும்அறியா பாலர்,முதியோர்,
சவமாய் வாழும் தாயார்,தந்தையர்
சுதந்திரமாக மீள்வதும் எப்போ?

சீர்தரும் திராவிடர் டில்லியில்ஆட்சி
சென்னையில்,தமிழகம்,நம்மவராட்சி
யார்வந்துதான்,என்ன!தமிழர்க்காச்சு
நீர்தன்னும்,வாயைதிறந்தால்தானாச்சு
யாருடன்,தமிழர்சேர்ந்தால்தானென்ன
யார்குற்றினாலும்,அமைதியேவேணும்
போர்! எனக்கதறும் சந்திரிகாவை
புலிகளைஅழைத்துபேசச்சொல்லும்

**என்.எஸ்.பிரபு.........நோர்வே**

(10.12.96 ல் அமெரிக்கஅதிபரின்,வெள்ளை மாளிகைக்கு தமிழில் அனுப்பப்பட்டது.)

**நிலை தளர்ந்து ஓடாரோ...!**

செல்லும்,குண்டும் தினம்பொழிய
சோர்வுடனே தமிழ்மக்கள்
புல்லும் புகைய பீதியுடன்
பிணிவந்தால் மருந்துமின்றி
அல்லும் பகலும் அமைதியற்று
ஆறியிருக்க இடமின்றி
இல்லமற்று பாயுமற்று
இடும்பை மேவ ஈழமண்ணில்
தொல்லை இன்னும் தணியாது
தினஞ்சுற்றம் சா நோக்க
சொல்லியழும் சோகமின்று
சோதனைமேல் சோதனையே
உண்டியற்று உறக்கமற்று
உடுக்கநல்லுடுப்பும் இன்றி
உண்டு ஒருவாழ்க்கையென்று
உரியகாலம் நோக்கியின்னும்
மண்டியிட்டு வாழாத
மாண்புமிக்க திராவிடரை
கொண்டு கொண்டு ருசியார்க்கும்
கூலிப்படை யெல்லாம்
அண்டைநாட்டு ஏழுகோடி
ஆர்த்தெழுந்து குமுறிவிட்டால்
நிண்டு நித்தம் வருத்துவரோ?
நிலைதளர்ந்து ஓடாரோ!!

**செ.நாகேந்திரன்.....லண்டன்**

**தமிழ்நாட்டு தலைநகரே.....!**

ஆபாசதிரைப்படங்கள் ஓடும்
திரையரங்கவாசலில்,
கறைபடிந்தமனிதமனங்கள்,
சாக்கடையில் கால்பதித்தும்
உணராது சுவரொட்டிகளை
வெறித்துப்பார்க்கும்!
சட்டையில் கறைபோக்கும்
புதிய நவீன சவுக்காரம்
விற்கும்!பிரித்தால்
செங்கல் இளிக்கும்!
கல்லைக்கூட காசாக்கும்
சிங்காரச்சென்னை!
படிகளில் புகைபோக்கும்
பன்னிரண்டு வயதுச்சிறுவர்!
தமிழ்நாட்டின் தலைநகர்,
பாடுபடுகிறது!இல்லையில்லை
பாடுபடுத்துகிறது!அல்லது
பாடாய்படுத்தப்படுகிறது!!

**புதுச்சேரி ச.வேல்முருகன்.**

**உலகத்தமிழர்களே........!**

உலகத்தமிழர்களே,ஒன்றுசேருங்கள்
—தென்
இலங்கைத்தமிழர்களின்
இன்னல் தீருங்கள்.(உலக)
அநுபல்லவி:
இலங்கையில் தமிழர்கள்
மகிழ்வுடன் வாழ—தமிழ்
ஈழம்பெறவேண்டும்
தனித்திறன்சூழ(உலக)
சரணங்கள்:
இலங்கைத்தீவிற்கு கைதிகளாக—
அன்று
இழிநிலையில்,குடிவந்தசிங்களர்தான்
நலமடைந்து தமிழர்களால்
வளர்ந்தார்கள்—இன்று
நாட்டில் மிகப்பெருகி
ஆட்சிபிடித்தார்கள்(உலக)
ஒட்டிவளர்ந்த மரத்தை
ஊனங்கொடி—உயிர்
பட்டுவிடச்செய்வதுபோல்
ஈனம் சிங்களர்
நட்புகொண்டுகாத்த தமிழர்களின்—
—உயிர்
நாடிப்பிடித்துக்கொல்லும்
எமனாகிறார்(உலக)
தனித் தமிழ் ஈழத்தில்
விடுதலைப்புலிகள்—கொடி
தலைநிமிர்ந்து பறந்து,
சிங்களஎலிகள்
குனிந்து தலை செல்லவேண்டும்
என்பதே—என்
தணியாதஆசை நிறைவேற
வேண்டும்(உலக)

**கா.ம.இராசமாணிக்கன்,சேலம்**

**வாழ்வு முடிவதில்லை.......!**

ஓடிஓடி உழைத்து
ஒழுங்காகப் பாடுபட்டு
மாடிவீடுகட்டி
மகிமையாய் குடியிருந்தாய்!
நாடிவந்த உறவுகளும்
தேடிவந்த நண்பர்களும்
நாறுமுடல் ஆறுமுன்னே
நகன்றுபோய்விட்டார்கள்!
பாழுமிந்த உடலளித்த
பல்சுவையை எண்ணியுந்தன்
பத்தினியும் சிலகாலம்
பதிவிரதையாயிருந்தாள்!
கூடியுந்தன் மைந்தர்களும்
குணமிகுந்து ஒருணர்வாய்
குடமெடுத்து சுடுகாட்டு
கொள்ளிவைத்து சென்றுவிட்டார்!
சந்தியிலே நின்றிருந்தோர்
சரித்திரத்தை நெறிப்படுத்தி
உன்வாழ்வில் நடந்தவற்றை
எழுச்சியுற்று படித்திருந்தார்!
வாழ்வு முடிந்ததென்று
வழுத்தும் மானிடனே!
நல்லோர்க்கு ஒருநாளும்
வாழ்வு முடிவதில்லை!!

**ஆரையம்பதி க.சபாரத்தினம்**

**ஆத்மா.....!**

எலும்புவரிச்சிலான
மார்புக்கூட்டுக்குள் இருந்து
ஏதோ ஒரு குருவி
அவலமாகக் கத்துகிறது!
கதைக்கிறது!!
அடிக்கடி பேசுகிறது!
சிலவேளை வெருட்டுகிறது!!
ட்க்..ட்க்..ட்க்....
ஓர் மரங்கொத்தி—என்
இதயச்சுவரைக்கொத்திக்கொண்டு
இருக்கிறது!
எப்போது ஓட்டைவிழுமோ
அப்போது மரங்கொத்திஆத்மா
பறந்துவிடும்.

**தி.திலீபன்............ஒஸ்லோ**

www.tamilarangam.net

கனடா:
பா.சிவலிங்கம்
இ.வளர்மதி
இந்தியா
பேராசிரியர். வசு மாசிலாமணி(சென்னை)
பேராசிரியர் ஐ.இராமச்சந்திரன்
திரைக்கலைஞர் பிரசாந்த்
மாயூரம் பாஸ்கரன்

இரா.ரூபதி, ஜான்ராஜ்தேவர் (திருச்சி)
இரா.இரவி, இலக்குமணசுவாமி (மதுரை)
ச. வேல்முருகன் (புதுச்சேரி)
பி.சத்தியநாராயணன் (கல்கத்தா)
இரா.ஜெயசேதுபதி (டெல்லி)
கதிர்.சம்பத்குமார் (டெல்லி)
ச.வெள்ளிங்கிரி, டாக்டர்.லோகாம்பாள் சுந்தரம் (கேரளா)
என்.ஆர்.இலட்சுமணன் (கைதராபாத்)

ரஷ்யா/மாஸ்கோ:
ஆர்.சுகுமார்
அ.நிக்சன் (அல். கதில்)
யோகநாதன் (ரியாட்)
எஸ்.காளிதாஸ் (ஜித்தா)
நஜீர். முகமது, (பாஹ்ரெயின்)
அப்துல்கனி, எம்.ஐ.ரபீக்(துபாய்)
எஸ்.கண்ணன், கணேசலிங்கம் (ஓமான்)

## தெருச்சாவு

முகில்கள் மொட்டை மாடியை
முத்தமிடும்.
பொறாமை கொண்ட வானம்
அடிக்கடி இடியாய் சத்தமிடும்.
வானை வெட்டி வேலி போடும்
"அம்மருட்டின்" 13 மாடி கட்டிடம்.
பெட்டி பெட்டியாய் அடித்த
குருவிக் கூட்டுக்குள்
கெட்டித்தனமாய் மானிடம் வாழும்!

கறுப்பு, மஞ்சள், சிவப்பு என்று
வெறுப்புக்காட்டும்
ஐரோப்பிய பூமியில்
உலகமே ஒன்றாய் வாழ்ந்தும் – நிறக்
கலகமே என்றும் மனங்களை வாட்டும்!

சூரியன் சிரிக்கும் நாட்களில் – வெள்ளை
ஆரியன் கிடப்பான் புற்பாய்களில்.
மாலை மயங்கும் வேளைகளில்
பாக்கிஸ்தான் வருமே சாலைகளில்!

பிச்சைப்பண நிலையங்களில்
(social offices)
பச்சை, பச்சையாய் பொய் சொல்லி
கத்தை, கத்தையாய் காசு கறக்கும்
வித்தை கொண்டவரே
வெளிநாட்டவர், என கனைத்து
கதைப்பர் வெள்ளையர்கள்.

மனைவியென்னும் வேலைக்காரியை
குசினிக்குள் குடி வைத்து,
பிள்ளைப் பெறும் இயந்திரமாய்
வாழவிட்டு
பணத்துக்குள் வாழ்வை
தொலைத்து விட்டு
வாழும் பல பாக்கிஸ்தான் குடும்பங்கள்.

சிறுவர் நிலையம் ஒன்றே
தாயின் பின்னால் சென்றே
விளையாடித்திரியும் காட்சி – ஐயகோ
இத்தாய்க்கு எப்போ மீட்சி.

மாதவிலக்கே காணாத மனைவியர்கள்
காற்றடித்த வண்டிகள்(வயிறு) – என்றும்
கத்தும் தள்ளுவண்டிகள்.
சனம் பெருகினாலும்
தினம் பிள்ளைப் பெறும்!

பாக்கிஸ்தான் பெண்கள் என
வெள்ளைகளின் வசை மாரிகள்.
நோர்வே
முக்கால் பங்கு முக்காடு போடும்
முஸ்லீம் நாடாகுமோ? என அச்சங்கள்

1996 ஆனி 28 அன்று
கோடை வெய்யிலுக்கு – முகில்கள்
குடை பிடித்தது.
சோடை போகாது வானம்
பன்னீர் தூவியது.

செட்டையில்லா பாக்கிஸ்தான் சிட்டு
குடும்ப வாழ்வில் வாட்டம் கண்டு
பறந்ததே எட்டாம் மாடியை விட்டு.

ஆத்மா அலறியது
ஆதரவு தேடியது
உயிரோ பிரிய மறுத்தது.
கடலில் இருந்து மீனின்
உடலை தரையில் போட்டது போல்
நாடி, நாளங்களுடன் உயிரும் சேர்ந்து
துடித்தது.
கறுப்பு ஒன்று வாழ்வில்
வெறுப்புக் கொண்டு கண்ணாடியூடு
குதித்தது என வேடிக்கை பார்த்தனர்
வெள்ளைகள் பலர்....

கண்டும் காணாமல்
கடந்து சென்றனர் சிலர்....
இவர்கள் தோல் மட்டுமா
வெழுத்து இருந்தது? – இல்லை
அவர்கள் உள்ளமும் கூடத்தான் என
வான் இடித்தது.
முகில்கள் அழுதது.
அவள் ஆத்மா பிரிந்தது.

மானிடம் இரங்காக் காரணத்தால்
வானம் இரங்கி அழுதது.
கருமுகில்கள்
மொட்டை மாடியில் கூடின.
தமது நிறத்தவள் எனப் பேசியன.
முகில்கள் முகிழ்ந்த கண்ணீரால்
முக்காடற்ற முஸ்லீம் பெண்
பெற்றாள் அபிசேகம். – வெள்ளையர்
யாருமே பெற்றிரார் அச்சோகம்.

சாவுக்குரிய சாட்டுகளைத் தேடி
பேசும் பிணங்கள் பேசின.
கைகள், கால்கள், வால்கள் வைத்து
நாக்கூசும் கதைகள் கூட
காற்றில் கலந்தது.
சிறகின்றிப் பறந்தது.

பிள்ளைகளை அரசு அள்ளிப்போக
தொல்லைகளும் அளவுமீற
பறந்தாள் பாவை கண்ணாடியூடு

பிள்ளைகளுக்கென பத்துக்காசு
கொடுத்து விட்டு
பெத்தவளைப் பாடையில்
தள்ளி விட்டு – பிள்ளைகளை
கத்தக் கத்த இழுத்துச் செல்லும்
நாகரீக உலகமாம் இது.

கத்தியுடன் கலைத்தான் கணவன்
கத்திக்கொண்டு குதித்தாள் மனைவ
சாகத்துணிந்த சுந்தரிக்கு
கத்தியென்ன? குதிப்பென்ன?
சண்டை என்ன? சாளரம் என்ன?

பாக்கிஸ்தான் தானே போனால் என்
நாட்டுக்கு என்ன நட்டமா?........
வெளிநாடெங்கும் மனிதாபிமானியெ
வெளிவேடம் போடும்
வீக்கிங்குகளின்(கடல் கொள்ளையர்
முகத்திரை கிழிந்தது.
வெறித்தனம் தெரிந்தது.

தண்ணீரே விறைத்து ஐசாகும்(பனிச்
தேசத்தில் கண்ணீரை எப்படி
எதிர்பார்க்கலாம்.?
செத்துப்போன இதயத்துடன்
சாகாப் பிணங்கள்
சிரிக்கவல்லவா முயற்சிக்கின்றன.

என் இதயமோ தொண்டை வரை
துள்ளியது.
உச்சந்தலையில் கிள்ளியது.
பள்ளி கொள்ளும் பாக்கிஸ்தானிபோ
நாளை உனக்கும் தெருச்சாவு தான்
என் மண்டையோட்டினுள்ளே மரண
சிந்திக்க ஓர் தருணம் என
மறைந்திருந்து வெருட்டியது!

ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வி.ஸ.சிவகுமார (புருனை)
டாக்டர்.சச்சி ஸ்ரீகாந்தா (யப்பான்)
மு.பத்மா.மணி (சிங்கப்பூர்)
க.மாணிக்கவாசகர், க.கணேசன், இரா.ந.வீரப்பன் (மலேசியா)
நாகலிங்கம், மு.சந்திரசேகரன் (மெடான்.இந்தோனேசியா)
திருமதி.மணி (ஜகார்த்தா.இந்தோனேசியா)
வே.நாகராஜா (தாய்லாந்த், பாங்கொக்)

எம்.என்.பாலாஸ்,பீ.ஜெகதீசன் (சுவீடன)
கா.செந்தில், த.புவனேந்திரன் (ஜேர்மனி)
எஸ்.அருள் (நெதர்லாந்த்)
கோபி.ரவி (மட்டக்களப்பு)
எம்.எஸ். அருள்பிரகாஸ், துவ.சஜீகரன் (மாத்தளை)
மதுமார், செ.கனகரத்தினம் (திருகோணமலை)
டாக்டர் ரீ. சுப்புலட்சுமி (லிபியா)

எ.ஸ.மயில்வேந்தன் (கனடா)
பாலா சக்குப்பிள்ளை (அட்டன்)
முகமதுகவுஸ், வீ.எம்.சிங்கன் (குவைத்)
எஸ். கதிர்காமநாதன், இரா.கலாதரன் (சுவிட்சலாந்து)
செ.பாஸ்கரன் (அமெரிக்கா)
பத்மா ஞானப்பிரகாசம் (அவுஸ்திரேலியா)
ஏ.யு.எல். ஏ.ஹீல்மி (தென்கொரியா)
கமலா வேலுப்பிள்ளை (பொட்ஸ்வானா)

பழமுண்ண வந்த பறவையின் சொண்டில்
ஒட்டிக்கொண்ட கத்தாளை விதை
எங்கோ ஒரு பனையில் விழுந்தது போல்
தேசம் தெரியாது.
பணந்தேடி விழுந்த எமக்கும்
கத்தாளை போல் ஓர் ஒட்டுண்ணி வாழ்க்கை.
தொப்புள் கொடி தாயகத்தில் அறுந்ததால்
கிடைத்த உறவற்ற சேர்க்கை.

அறுந்தது தாயகத்தில் ஆணிவேர்.
விட்டது இங்கே விழுதும் –அதனால்
கறுப்பன் என ஓர் புதுப்பேர்

என் கபாலத்தினுள் இருந்து ஓர் கசரோகி
குடல் கக்கும் வரை
இருமிக்கொண்டே இருக்கிறான்.
'உன் ஆணிவேரைச் சுற்றி
ஊனை உருக்கி, உதிரத்தை ஊற்றாவிடில்
உனக்கும், உன்சந்ததிக்கும்
வெளிநாடுகளில் தெருச்சாவுதான்.
விழுதுகள் ஆயிரம் இருப்பினும்
ஆணிவேராகாது' என
கயரோகி இருமிக்கொண்டே இருக்கிறான்.....

(அம்மரூட் : நோர்வேயில் உள்ள இடம்
அங்கே நடந்த உண்மைக்கதை இது)
**கவிக்கதையாய்**
**எழுதியவர் திருச்செல்வம்–திலீபன்**

<u>பிறப்புக்கு அர்த்தம்</u>
தொலைக்காட்சியில்
தொலையாமல்
விலைபோய்க் கொண்டிருந்தது
நிலையான செய்தி ஒன்று
26.11.1996 பிரபாகரனின்
பிறந்த நாள்.....,
பலரின் இறந்த நாள்
ஆகும் என
அரசு அவதானமாய் இருக்கிறதாம்.
மாவீரர்கள் பிறக்கிறார்கள்
இவர்கள் பிறப்பிலும் பலர்
இறக்க வேண்டுமா?

தெருக்கள் சிதறும்
ஆமிமுகாம் தகரும்
தெற்கெங்கும் சாக்குரல்
கேட்கும்
இலங்கை எங்கும்
பிணங்களை எண்ணும்.
எண்ணிக்கை குறைந்தவர்
வெற்றி கொண்டாடுவர்
இதுவா வெற்றி.....?
இதுவா விடுதலை.....?
எனக்கு வெற்றிக்கோ......
விடுதலைக்கோ......
அர்த்தம் புரியவில்லைப் பிரபாகரா!!!
மாவீரர்கள் பிறந்தார்கள்
மண்ணிலுள்ளவர்கள் மடிவதற்கா?

மூளை முழுவதையும்
சிங்கள அரசிடம் கொடுத்து விட்டு
கூலிக்குக் கூத்தாடுகிறது
அக்கும்பியடிப் பட்டாளம்
ஒரு வயிறு சோற்றுக்காய்
செஞ்சோற்றுக் கடன் தீர்க்க
கர்ண பரம்பரை என
உயிர் திறக்க நிற்கிறது–அந்த
துட்டகைமுனுச் சிங்கங்கள்.
உன் பிறந்த நாளன்று
இம்மிருகங்களைக் கொன்று
உன் பிறப்பையும் மிருகப்பிறப்பு
ஆக்கிவிடாதே பிரபாகரா!!!
**–விபீஷணன்–**

<u>மொட்டை</u>

புத்தம் சரணம் கச்சாமி!
மொட்டை அடித்த பொய்ச்சாமி!
துவேசிகளாய் காவி
போர்த்த முழு ஆமி!
உண்மையில் இவர்கள் ஆசாமி!

கிட்லர் பெற்ற புத்திரர்கள் !
மொட்டை அடித்த சித்திரர்கள்!
இவர்களும் முழுத்துரோகிகள்!
கொலைகாரப் பரதேசிகள்!

மொட்டை அடித்தவர்கள் எல்லாம்
கெட்ட துரோகிகள் தானே?
வெளியே போட்டார்கள் மொட்டை!
ஐயோ....பழியே!
உள்ளேயுமா மொட்டை?
**–நக்கீரன்–**

www.tamilarangam.net

ஜெ.வேலு, நா.சங்கரன், லட்சுமணன் (புக்கர்)
அப்துல்ரசாக் (பர்மா)
ச.யோகேந்திரம், வ.க.பரமநாதன் (டென்மார்க்)
செ.ஜெயகுமார், த.தர்மசீலன்,இ.கிருபானந்தன் (பிரான்ஸ்)
வீ.கல்லைவேணியன், வீரன், காசண்முகலிங்கம் (கொழும்பு)
டாக்டர். நா.வேல்முருகு (பேராதனை)
திருமதி. பீ.கம்ஹானந்தி (யாழ்ப்பாணம்)

## திராவிடன் வீரம்-ஆசிரியர் க.நகைமுகனுடன் ஒரு கருத்தான நேர்காணல்!

**-புதுச்சேரி.ச.வேல்முருகன்**

தனித்தமிழர் இயக்க பொதுச்செயலாளரும், திராவிடன் வீரம்-இதழ் ஆசிரியருமான திரு.க.நகைமுகன் அவர்களை சென்னை சென்றபோது, சந்தித்து உரையாடினேன். இவர் தமிழர்,மண்மீட்புப்பணிகளை கொள்கையாகக் கொண்டவர்! தமிழீழத்தின் தீவிர ஆதரவாளர்! கடந்ததேர்தலில் முதல்வர் கருணாநிதியை எதிர்த்து சேப்பாக்கம் தொகுதியில் போட்டியிட்டவர். அவருடன் சர்வதேசதமிழருக்காக இதோ ஒரு நேர்காணல்...........!

கேள்வி:தங்கள் கழகத்தின் கொள்கை யாது ?

பதில்:ஆட்சியைப்பிடிப்பதோ,அதிகாரத்தைச்சுவைப்பதோ எமது நோக்கமல்ல.தமிழினத்தில் இருந்துவரும் கலப்படத்தை அடையாளம்காட்டி தமிழரல்லாதவர்களை இனம்பிரித்து தனித்தமிழர்களை தமிழர்தேசியவிடுதலைக்கு அழைத்துச்செல்வதும், நமது மண்ணை அடுத்தவர் அதிகாரத்திலிருந்து மீட்பதுமே, எமது இலட்சியமாகும்.

கேள்வி:கடந்ததேர்தலில் கலைஞர் கருணாநிதி அவர்களை எதிர்த்து ப்போட்டியிட்டதற்கு அடிப்படைக் காரணம் என்ன?

பதில்:கருணாநிதிதான் முதல்வராகப்போகிறார் என்று,மூப்பனாரும்,ரஜினிகாந்தும் சேர்ந்து ஒருதோற்றத்தை உருவாக்கிவிட்டநிலையில், தமிழினத்தலைவர் என்று தம்மை விளம்பரப்படுத்திக்கொள்ளும் அவர் தமிழரே அல்ல!தெலுங்கரே என்று காட்டுவது தான்,எனது நோக்கம்!

கேள்வி:தமிழகமுதல்வர் ஈழதமிழர்களுக்கு ஏதேனும் செய்வாரா?

பதில்:கருணாநிதியும் சரி,தி.மு.கவும் சரி,ஈழத்தமிழர்களுக்கு எதுவும் உதவி செய்யப்போவதில்லை. புலிகள் தான் ஈழத்தமிழரின் ஒரே பிரதிநிதிகள்!தி.மு.க.கூட்டணி அரசு புலிகள் மீதான தடையை நீடித்து இருப்பதை செயலலிதாவோ,கோபால்சாமியோ கண்டிக்காதது இவர்களது உள்நோக்கையும்,சந்தர்ப்பவாதத்தையும் வெளிப்படுத்துகிறது.

கேள்வி:புலிகள் இயக்கதடை பற்றி!

பதில்:டெல்லியில் அமைகிறஅரசு சோனியாகாந்தியை திருப்திப்படுத்த வேண்டியஅவசியமில்லாமல் போனால்தான் தடை நீங்கல் சாத்தியம்!

கேள்வி:தமிழீழம் அமைய வன்முறை அவசியம் தேவையா? பேச்சுவார்த்தையால் முடியாதா?

பதில்:போராட்டம் என்று வந்தபிறகு எதிரி வைத்திருக்கும் ஆயுதத்தை வைத்துத்தான் நம்முடைய ஆயுதமும் அமையும்.

கேள்வி:சிங்கள இராணுவத்திற்கு அமெரிக்கராணுவத்தினர் பயிற்சி அளிப்பது குறித்து.....?

பதில்:அமெரிக்காவின் இந்தச்செயல் மிகவன்மையாக,கண்டிக்கத்தக்கது. வியட்நாமில் சூடுபட்ட அமெரிக்கா, இலங்கை,இந்தியாவை திருப்திப்படுத்த,ஈழத்திலும் மூக்கைநுழைப்பது சரியல்ல,அனைவருமே மூக்கறுபடப்போவது உறுதி!

கேள்வி:தமிழகஅரசு புலிகள்அமைப்பை தடைசெய்து வெளியிட்ட அறிக்கையில்,மொழி,பண்பாடு,இனம் வரலாறு, ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியதமிழர்க்கும், இலங்கைத்தமிழர்க்குமிடையே காணப்படுகின்ற ஒற்றுமைகாரணமாக-என்று ஒருவரி வருகின்றதே,அதுபற்றி உங்கள் கருத்தென்ன?

பதில்:இந்தியஅரசின் தடைநீடிப்புக்கு முக்கியகாரணமே அதுதான். தம்மையும் அறியாமல் ஒருமுக்கிய உண்மையை மத்தியஅரசு ஒப்புக்கொண்டுள்ளது.புலிகளின் ஆதரவாளர்களை ஒடுக்குவதற்காகத்தான் இந்தத்தடை என்பது வெட்டவெளிச்சமாகிவிட்டது.களத்தில் நிற்கும் புலிகளுக்கு இங்கு தடை தேவையில்லாத ஒன்று.புலிகளல்லாத துரோகபோராளிக்குழுக்கள் தான் இந்தியாவில் பாதுகாப்பாக வாழ்கின்றன.

கேள்வி:ஒரு வாரஇதழில்,திரைக்கலைஞர் விசயகாந்திடம் புலிகள் தலைவர் பிரபாகரனை ஏன் ஆதரிக்கிறீர்கள்? எனக்கேட்டதற்கு தானும் அவரும் ஒரேஇனம் எனப் பதிலளித்திருக்கிறாரே!இது பற்றி...?

பதில்:குதிரையில் ஏறியவனெல்லாம் தேசிங்குராசனும் அல்ல,மதுரையில் பிறந்தவரெல்லாம் தமிழ்மறவரும் அல்ல.தமிழகமுதல்வர் பதவிக்கு ஆசைப்படும் ஒவ்வொருவரும், குறிப்பாக தமிழர்அல்லாதவர்கள் பேசுகிறபேச்சே அது! கப்டன் பிரபாகரன்-என்று,ஒரு படமெடுத்து,அதில் சம்பாதித்து சுவை கண்டவர்,வரலாறு தெரியாமல் வசனம் பேசும் விசயகாந்திடம் தமிழர் சமுதாயம் ஏமாந்துவிடக்கூடாது!

கேள்வி:சிறப்புமுகாம்களிலும்,சிறையிலும் தமிழகத்தில் அவதியுறும் ஈழதமிழர்கள் அவர்தம் அகதிகட்கான உரிமைபெற என்ன செய்யப் போகிறீர்கள்?

பதில்:புதியதமிழகஅரசு இங்குள்ள ஈழதமிழர்க்கு மறுக்கப்பட்ட கல்வி வசதியை மீட்டுக்கொடுத்துள்ளது. அதேபோல் சிறப்புமுகாம்களை ஏற்படுத்திய கலைஞர் கருணாநிதி அவர்களே அவற்றை அகற்றிட வேண்டும்.இதுகுறித்து மேலூர் சிறப்புமுகாம் தோழர் பாலச்சந்திரன் எழுதிய கடிதத்தை முதல்வர் கவனத்துக்கு அனுப்பியுள்ளேன்.இச்சிறப்புமுகாம்களை அகற்றாவிடில்,தமிழீழவிடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புகுழு,நெடுமாறன் தலைமையில் போராட்டம் நடத்தும்.இது குறித்து டெல்லி சென்று,அரசியல் தலைவர்களையும்,அமைச்சர்களையும் சந்திக்கஉள்ளேன்.(சர்வதேச தமிழர்-வெளியிட்ட பாலச்சந்திரன் கடிதத்தை நினைவுகூர்ந்தார்)

கேள்வி:கச்சதீவு சிக்கல் குறித்து?

பதில்:கச்சதீவை இந்தியாவுடன் சேர்ப்பது என்றும் தமிழனுக்கு எட்டாக்கனியாகும்.இலங்கையிடம் இருந்தால் அது,என்றோ ஒருநாள் தமிழீழத்தின் ஒருபகுதியாக,தமிழ்மண்ணாகச்சேரும்.இந்தியமண்ணாக ஆவதில் தமிழர்க்கு எந்தப்பயனும் இல்லை.

கேள்வி:தமிழ்இளைஞர்கட்கு தங்களது அறிவுரை என்ன?

பதில்:தமிழ்இளைஞர்கள்,யுவதிகள் திரைப்படகலாசாரத்தால் சீரழிந்து வருகிறார்கள்,என்பதில் சந்தேகமே இல்லை.தமிழர்க்கு மொழிப்பற்று, இனப்பற்றுபோல் மண்பற்றும்,மிகத் தேவை.தமிழ்சமுதாயம் இயற்கையிலேயே ஆத்மிகஈடுபாடு உள்ளது. நாத்திகபிரசாரம் தமிழர்களை எதிர் மறையான பிளவுக்குட்படுத்தியுளது தமிழ்அறிவியல்மொழி!(காதல்,வீரம்) இலக்கியம்,இலக்கணம் செறிந்தது. தமிழை நேசிக்க,கற்கவேண்டும்.

கே:உலகளவில் தமிழினம் உயர...?

ப:தமிழனுக்கு ஒருநாடு!ஒருகொடி! ஒரு ராணுவம்!உலகநாடுகள் சபையில் ஒருஇடம்!இவை,கிடைக்கும் வரை தமிழர்நிலை விடியாது! தமிழர் வாழ்ந்தால் தான் தமிழ்வாழும். தமிழ்மண் இருந்தால் தான் தமிழர் உயர்வர்.அப்போதுதான் சுதந்திரமாக,மதிப்பாக தமிழன் சொந்தஅடையாளத்துடன் உலகில் பவனிவர முடியும்.இதுவே தமிழ்,தமிழர் உயர ஒரேயொரு வழியாகும்.

www.tamilarangam.net

## நோர்வேயும் ஒளிவிழாவும்

நோர்வே வடதுருவத்தை அண்மித்திருக்கும் ஓர் பிரதேசம். சுவீடன், பின்லாந்து, சோவியத்யூனியன் ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டதும், மலையும் மலைசார்ந்த இடங்களும், கடலும் குடாக்களும் நிறைந்த வளமான செழிப்புமிகு நாடாகும். ஆரம்ப காலங்களில் மீன்பிடியும் விவசாயமுமே நாட்டின் மூலவளங்களாக இருந்தன. இன்று நில வெண்ணையே முக்கிய மூலதனமாக அமைந்துள்ளது. காலப்போக்கில் எமது நாடு பல கலாச்சரப்படிவங்களை இழந்து வந்துள்ளது. அதில் ஒன்றுதான் நத்தார் என நாம் கொண்டாடும் எமது பண்டைய ஒளிவிழா. இது கிறீஸ்தவ வருகைக்கு முன்பே இங்கு கொண்டாடப்பட்டு வந்தது.

எமது மூதாதையர்கள் இந்து மதத்தவரைப்போன்று பலதெய்வங்களையும், தேவதைகளையும், இயற்கையையும் வணங்கிவந்தனர். இதில் ஒன்றே நிஸ்ச, என அழைக்கப்படும் கிறிஸ்மஸ்தாத்தா ஆவார். இவர் விவசாயிகளுக்கு உதவுவார் என நம்பப்பட்டு வந்தது. மாட்டுத்தொழுவங்களில் பாலகர் மூலம் உணவுகொடுப்பார்கள். இப்படிப் பலவகையான நிஸ்சக்களை நம்பினார்கள். உ.ம்-பியோச நிஸ்ச (மாட்டுத்தொழுவம், ஆட்டுத்தொழுவம் பன்றித்தொழுவம், குதிரைத்தொழுவம் போன்றவற்ரைக் காப்பவர்),புண்ட நிஸ்ச (தோட்டம் துரவுகளைக் காப்பவர்), ஸ்கூஎ நிஸ்ச (காடுகளைக் காப்பவர்)எனப் பற்பல.

இந்த ஒளிவிழாவை நோர்வேயியமொழியில் சூல்பெஸ்ட் (சூரியவிழா sol fest), லீஸ்பெஸ்ட் (lys fest),வின்ரர் சூல்வர்வ்(vinter sol hverv) எனப்பல பெயர்கொண்டு அழைக்கப்பட்டு வந்தது. ஆனி மாதம் 23ம் திகதியில் இருந்து சூரியன் ஒளியை விட்டுத்திரும்புவான். இந்த நாளே சந்தான்ஸ் என அழைக்கப்படும் ஒளிகூடியநாளாகும். இந்த நாளில் இருந்து ஒளிமங்கிக் கொண்டே போகும். இன்நாளில் தீ வளர்த்து, மாமிசங்களைச் சுட்டு உண்டு, மதுவுந்தி, பாடல், ஆடல்களுடன் கொண்டாடுவார்கள்.இதே போன்றே மார்கழி 23ம் திகதிகளில் சூரியன் இருளைவிட்டு ஒளியின் பக்கம் திரும்புவான்.இந்நாள் இருள் கூடிய நாளாகவும் கறுப்புச் சக்திகளான பேய், பிசாசு போன்றவற்றின் நடமாட்டம் கூடியிருக்கும் நாட்கள் எனவும் கருதினார்கள். இம்மாதத்தில் வருத்தம், துன்பம் நிறைந்த நாட்களாக இருக்கும். இதேபோன்றே இந்துமதத்தவர்களும் இதைப் பீடை மாதம் எனவும், இம்மாதத்தில் ருதுவான பெண்கள் தோயமுடியாதவர்களாக இருப்பார்கள் எனவும் எண்ணினார்கள்.மார்கழி 24 சூரியன் இருள்கோட்டை எட்டி விடுவான். இந்த நாளே யூல் என நாம் அழைக்கும் ஒளிநாளாகும்.

இந்த யூல் என்னும் ஒளிவிழாவை "விக்கிங்குகள்" ஒருவிதமாகவும், விவசாயிகள் வேறு விதமாதமாகவும் கொண்டாடினார்கள். விக்கிங்குகள்(கடல்கொள்ளைக்காரர்கள்) தமது படகுகளை கரையில் இழுத்து விட்டு அலங்கரிப்பார்கள். அங்கே மதுபானம், மாமிசம் எனப் படகுகள் நிறைந்திருக்கும். கொள்ளையடித்த பொருள்கள் காட்சிக்கு வரும் மார்கழி 24ம் திகதி இரவு கடற்கரையில் தீ வளர்க்கப்படும். மிருகங்கள் பலியிடப்பட்டு வளர்த்த தீயில் சுட்டு உண்பார்கள். குடும்பம், குடும்பமாக வீக்கிங்குகளின் குடும்பங்கள் கூடி உணவு, குடி, கூத்து, கும்மாளமாக மார்கழி 24 கழியும். கடலில் வீக்கிங்குகள் எந்தத் திசையில் இருந்தாலும் இந்தநாளில் குடும்பத்திடம் திரும்பி வந்துவிடுவார்கள். இந்த நடவடிக்கையை இன்று கூடக் காணக்கூடியதாக இருக்கிறது. இந் நாளிலேயே யார் யாரைத் திருமணம் செய்யப் போகிறார்கள் என்ற இரகசிகம், பரகசியம் ஆக்கப்படும்.

~~விவசாயிகளுக்கு உதவுபவன் சூரியன்.~~ அவனின் வருகையால் பூமியில் விளைச்சல் பெருகும், நோய் நொடிகள் அகலும், கறுப்புச் சக்திகளான பேய் பிசாசுகள் விலகும். ஒளி கூடக்கிடைக்கும். நாட்களிலே இருள் கூடிய நாளான மார்கழி 24ம் திகதி பகல் விவசாயிகள் அனைவரும் பழம் இரும்புத் துண்டையோ அன்றி வெள்ளிகாசையே எடுத்துக்கொண்டு ஊர்வலமாகப் பாடி, ஆடிக்கொண்டு போவார்கள். ஒவ்வொரு வீட்டுக் கதவுகளிலும் கரியினாலே அன்றி தாரினாலே சக (+) என்னும் குறியை இட்டுக் காவல்



விளம்பரம்:1.மகிழ்வான விடுமுறைக்கு மலிவான விமான டிக்கட்டுகள் ஒழுங்குசெய்துதரப்படும்
2.நோர்வேஜிய-தமிழ்-ஆங்கில மொழிபெயர்ப்புகள்,திருமண அழைப்பிதழ் அச்சுவேலைகள், செல்வாங்கில்ல்சன் நிரப்பல்,வீடியோ படப்பிடிப்பு ஒழுங்குசெய்யப்படும்.
3.தமிழ் கலைநிகழ்ச்சிகள்,கவியரங்கு,உரைநிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்படும்
சகல தொடர்புகட்கும் : தொலைபேசி-பாக்ஸ்:32.813416

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுத்துவார்கள். பின் தாங்கள் கொண்டு செல்லும் இரும்புத் துண்டை ஓர் பாழும் கிணத்தில் போட்டுவிட்டுத் திரும்பிப் பார்க்காமலே வருவார்கள். இதனுடைய அர்த்தம் கறுப்புப் பேயைப் பிடித்துச் சென்று பாழும் கிணத்தில் எறிந்தாயிற்று! என்பதாகும். இவர்கள் அனைவரையும் கிராமத்தலைவர் வழிநடத்துவார். அன்று இரவு முன்பே அறிவித்திருந்த இடத்தில் யாவரும் கூடுவார்கள். தீ வளர்க்கப்படும், மாமிசங்கள் வாட்டப்படும், குடிவகைகள் பரிமாறப்படும், ஆடல் பாடலுடன் மார்கழி 24 கழியும்.

எமது கலாச்சாரப்படி நோர்வேயில் மக்கள் வாழத்தொடங்கிய காலம் தொட்டு ஞாயிற்றுக் கிழமை ஓய்வுநாளாகவே இருந்து வந்திருக்கிறது. இந்நாளில் ஒருவரும் வேலைக்குப் போகமாட்டார்கள், பால் எடுப்பவர்களைத் தவிர. இவர்களும் காலை மாலை பால் எடுப்பதற்காக சிலமணிநேரங்கள் மட்டுமே செலவழிப்பார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் அழகிய தோய்த்துலர்ந்த தூய்மையான ஆடைகளையே அணிவார்கள். இதை இன்றும் கிராமப்புறங்களில் வயதுபோனவர்கள் இன்றும் கடைப்பிடித்து வருவதைக்காணலாம். எனது பெற்றோர் ஒருகிழமைக்கு முன்பே தீர்மானிப்பார்கள் அடுத்த ஞாயிறு எந்த உடுப்பைப் போடுவது என்று. யூல் (நத்தார்) என அழைக்கப்படும் ஒளிவிழா வருவதற்கு முதல் வரும் ஞாயிற்றுக்கிழமையை ஊத்தை ஞாயிறு! என்று அழைப்பார்கள். ஏனெனில் தூய்மையான உடுப்புப் போடக்கூடாது என்பது வழக்கம். நத்தாராகிய ஒளிவிழாவன்று இந்துக்களின் தீபாவளி போன்று புது உடுப்புப் போடுவார்கள்.

யூலதிரே (கிறிஸ்மஸ் மரம்) க்கும் கிறீஸ்தவத்துக்கும் உண்மையிலேயே எந்தத் தொடர்பும் கிடையாது. ஏனெனில் இந்த மரம் யேசுவின் பிறப்பிடமான இஸ்ரேயிலில் இருக்கிறதா என்பதே கேள்விக்குறி. இது யேமனியில் இருந்து வந்த கலாச்சாரப் பின்னணி கொண்டது. இது எந்தகாலநிலைகளையும் வென்று பச்சைப் பசேரென்று என்றும் இருக்கும். அதனால் எந்தகறுப்புச் சக்திகளையும் வென்று வாழும் தன்மை கொண்டது எனவும், கறுப்புச் சக்திகளை விரட்டி வீட்டைக் காக்கும் என நம்பினார்கள் எமது மூதாதையர். இதனாலேயே இம்மரத்தை வெட்டிவந்து வீட்டில் வைத்து அலங்கரித்தார்கள். மரத்தின் நுனியில் நட்சத்திரம், சூரியனையும் கிளைகளில் அழகுமிகு பொம்மைகள், அலங்காரப் பொருட்கள் போன்றவற்றைத் தொங்கவிடுவார்கள். அவை அனைத்தும் இயற்கையுடன் கூடியதாகவே இருக்கும்.

கிறிஸ்தவமதம் காரால் கோர்பாகிர என்ற அரசரால் இங்கிலாந்தில் இருந்து எடுத்து வரப்பட்டு எம்முள் திணிக்கப்பட்டதென்றாகும். கிறிஸ்தவ மதத்தைத் தழுவாதவர்கள் பாடசாலை போகமுடியாது, என்ற தடுப்பு விதிகள் கூட இருந்தன. கிறிஸ்தவமதத்தின் ஆக்கிரமிப்பின் பின்னரே இறகு கொண்ட தேவதைகளை தொங்கவிடும் வழக்கம் எம்மிடையே உண்டானது.

இன்றும் எமது பழைய பண்பாடுகளை கியூமானத்திக்கர்(மனிதத்தை நம்புபவர்கள்),கேட் நிங்கர் எனக் கூறிக்கொள்பவர்கள் காப்பாற்றியும் கடைப்பிடித்தும் வருகிறார்கள். எனது குடும்பம் கூட இம்முறையான பண்டைய கலாச்சாரத்தைப் பின்னணியையே பின்பற்றி இவ்விழாவைக் கொண்டாடி வருகிறோம். நீண்டு கிடக்கும் எமது நாட்டில் குடும்பத்தவர்கள் அடிக்கடி சந்திப்பது என்பது சுலபமான விடயமில்லை. ஒரு வருடத்தில் ஒருதடவையாவது சந்தித்துச் சுகம் விசாரிக்கும் நாளே இந்த ஒளிநாள். கிறிஸ்தவமதத்தில் நம்பிக்கை கொண்டவர்களைத் தவிர மீதிப் பெரும் பான்மையான நோவேயிய மக்கள் தேவாலயங்களுக்குப் போவதில்லை. வீட்டில் குடும்பங்களாக சேர்ந்திருப்பார்கள். சந்திக்க வசதியற்றவர்கள் தொலைபேசியில் கதைப்பார்கள். குறைந்த பட்சம் எம்மை நினைத்தோம் என சிறு பரிசுப்பொருளாவது அனுப்பியிருந்திருப்பார்கள்.

வாழ்க நன்கு ஒளிவிழா!!!!!

வாய்மொழி மூலம்: அஸ்திரி நிக்ரேர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஒஸ்லோ வலம்

1)நோர்வேயின் தொழிலாளர் கட்சியின் தலைவியாக இருந்த குரு காலம் புருந்லாண் தனது பதவியை விட்டு விலகியதன் பின் யாகலாண் அப்பதவியை ஏற்றார். இப்போது பல இருளில் கிடந்த ஊழல்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. இது புதிய பிரதமருக்குப் பிரச்சனையாக இருந்தாலும் கூட ஜனநாயகம் தூக்கி நிமிர்த்தப் பட்டுள்ளது. உலகின் முதல் பெண் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவில் இருந்து மாக்கிரட் தட்சர், பெனாசிர்பூட்டோ. குரு சந்திரிகா வரை சட்டம் இரக்கமே இல்லாது பெண்களின் இரும்புப் பிடியில் இருந்து தவித்ததாக அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள். மென்கரங்கள் வன்கரங்கள் ஆனது எப்போது? மெல்லிடையாளை இனி இரும்பிடையாள் எனலாமா?

2)நோர்வேயில் வேலையில்லாத்திண்டாட்டம் குறைந்திருப்பதாக தொழில் அதிகாரபீடமும், செய்தி நிறுவனங்களும் அறிவித்திருந்தன. இந்தத் தரவானது தொழில் நிலையத்தில் பதிந்து உதவிபணம் பெறுவோர் தொகையே அன்றி உண்மையான தொகை அல்ல. சுமார் 3 வருடங்களாக உதவிபணம் பெற்றவர்கள், புதிதாகப் படித்து முடித்தவர்கள், முன்பு வேலை ஏதும் செய்யாதவர்கள்,(உ.ம் தாய்மாராக வீட்டில் இருந்தவர்கள்). கோர்ஸ்களுக்குப் (Course) போபவர்கள் எவருமே இக்கணக்கெடுப்புக்குள் அடங்கவில்லை. உண்மைக்கணக்கு எடுக்கப்படுமானால் வேலையில்லாத் திண்டாட்டம் கூடியே இருக்கிறது

3)சிவாஞ்சலி நர்த்தனாலயா நடத்திய 3ஆவது ஆண்டு நிறைவு விழாவில் இந்து கலாச்சார மன்றம் கோவில் கட்டுவதற்காக அனுமதி 90வீதம் சரிவந்துள்ளது மீதி 10வீதம் நாளை தெரியும் எனவும் பணத்தை வாரி வழங்குங்கள் எனவும் அறிவித்தது. ஆனால் பல நாட்கள் போய் விட்டன. அனுமதி இன்னும் அளிக்கப்படாமல் பிள்ளையாருக்குத் திருமணம் நடந்தாற்போல் (இலங்கைப்பிள்ளையாருக்கு) இருக்கிறது. நீதியையும், நியாயத்தையும், உண்மையையும் பேசவேண்டியவர்களே பணம் திரட்டுவதற்காக இப்படி செல்லலாமா? இதுதான் ஆலய தர்மமா? அல்லது சமயதர்மமா? அரசதரப்பில் இருந்து எந்த விதமான உறுதி மொழியும் கொடுக்கப்படவில்லை. மேலதிகவிபரங்களை அறியவிரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டியது plan og bygging etaten தொலைபேசி 22662020 .

4) வெளிநாட்டவர்களுக்காக அரசு பெருந்தொகையான பணம் செலவு செய்கிறது. நாட்டுக்கு இது பெருநட்டம்! என வெளிநாட்டவர்களைச் சாட்டி, நிறவாதத்தைத் தூண்டி வோட்டுக் களைப் பெற்றுக் கொண்டிருந்தது, முன்னேற்றக்கட்சி. கணக்கு எடுத்தபோது தான் புரிந்தது வெளி நாட்டவர்களால் தலை ஒன்றிற்கு 1500 குரோண்கள நாட்டுக்கு இலாபம் என்பது. நிறவெளி நாட்ட வர்கள் வேலை எடுக்கும் வாய்ப்பு குறைவாக இருந்தபோதும் கூட, நாட்டுக்கு இலாபகரமாக அவர்கள் இருப்பது அரசுக்குக் கூட ஆச்சரியமாக இருந்தது. முன்னேற்றக் கட்சித்தலைவரின்முகத்தில் அசடுதான் வழிந்தது.

5)பொறியலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைப்பது அரிதாகவுள்ளது. அதிலும் நிறமனிதர்களுக்கு மிக மிக அரிதாகவுள்ளது. இந்நிலைமையைப் பயன்படுத்தி வகுப்புகள் கொடுப்பதாக கூறித் தொடர்பற்ற வகுப்புகளைக் கொடுத்து சிலர் பணம் கறக்கின்றனர். இப்படிப் பாதிக்கப்பட்ட ஒரு சிலர் இணைந்து தொழில் வாய்ப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கான உரிமையைக்கோரியுள்ளனர். சமூக.அரசியல் சீர்கேடுகளை எழுத்து மூலம் மேல்மட்டங்களுக்கு வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். குழுவாக இணைந்தவர்களில் நோர்வேயியர் தமிழர். ஈரானியர். சோமாலியர். ரோமானியர் அடங்குவர். தொடர்பு கொள்ளவிரும்புவோர் :-

Akademiskarbeidsformilding Norsk tele 64927252

தமிழ் தொலைபேசி 22166733

6)நோர்வேஜிய மொழியில் hjul என்றால் சக்கரம் இங்கே H சத்தம் இல்லாதது ஒளிநாளில் இருந்து மீண்டும் ஒளிநாளுக்கு சக்கரம் போல் சுழன்று சூரியன் வந்ததினால் கிறிஸ்மஸ்சையும் Jul என அழைத்தார்கள். ஆதலினால் இது சூரியனை மையப்படுத்திய நாளே தவிர சமய சம்பந்தமான நாளாகக் கருதமுடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

7)துரெண்கைத்திலுள்ள ஈழத்தமிழர் சங்கத்தினால் நடத்தப்பட்ட வாணிவிழாவிற்கு ஒஸ்லோவில் இருந்து நிகழ்ச்சிகள் சில கொண்டு செல்லப்பட்டன. ஒஸ்லோ தமிழ்சங்கத்திற்காக நக்கீரனார் எழுதி நெறிப்படுத்திய "அவலங்கள்" என்னும் நாடகமும் அனித்தா ஜெயானந்தனின் பரதமும் நல்ல வரவேற்பைப் பெற்றன. நாடகமானது 2 நடிகர்கள், 1 உரைஞர் உடனே, எந்த ஒரு பெண் நடிகரும் இல்லாமல் பெண்பாத்திரங்கள் நடித்து முடிக்கப்பட்டது. 30 நிமிடங்களுக்குள் தாயக, புலம்பெயர்ந்த வாழ்விடங்களின் பிரச்சனைகள் வந்து போயின. சுருக்கமாகவும் கச்சிதமாகவும் நாடகம் இருந்தது எனப் பலர் விமர்சித்தார்கள்.

8)துரொண்கெயிம் ஈழத்தமிழர் சங்கம் இந்து மதஅனுஸ்டானங்களுக்காக ஓர் குழுவை நியமித்திருந்தது. அக்குழுவானது பிரிந்து மக்களையும் பிரித்துத் தனித்து சங்கத்தின் அனுமதியின்றி இயங்கலாயிற்று. இதனால் சிறுதொகையில் வாழ்ந்த தமிழ்மக்கள் கூறிடப்பட்டனர். ஒஸ்லோவிலுள்ள நோர்வே தமிழ்ச் சங்கம் இந்நிலையில் இருந்து தப்பியதற்குக் காரணம் இந்து கலாச்சாரமன்றம் தனித்து ஆரம்பிக்கப்பட்டதே எனக் கதைக்கப்பட்டது.

9)நோர்வேயின் அயல்நாடான இரஸ்யாவுக்குச் சொந்தமான கோலா தீவிலுள்ள அணு உலையில் இருந்து ஆபத்தான கதிர்வீச்சுக்கள் வெளிக்கசிந்துள்ளன. இவை முகிலுடன் கலந்து சஞ்சரிக்க ஆரம்பித்து விட்டன. இம்முகில்கள் 3மணித்தியாலங்களில் நோர்வேயின் அண்மித்த எல்லையான சிர்க்நெஸ்சையும், 26 மணித்தியாலங்களில் ஒஸ்லோவையும் வந்தடையும் என கதிர்வீச்சுக் கண்காணிப்பு நிலையம் 16.12.96 அறிவித்தது. இக்கதிர்வீச்சினால் ஏற்படப்போகும் விபரீதங்கள் உஸ்!உஸ்!எனப்போர்த்து மூடப்பட்டுள்ளது. இப்படியான ஒரு கதிர் வீச்சுக் கசிவு சில வருடங்களுக்கு முன்பு இரஸ்சியாவில் நடந்தது. இதன் பாதிப்பு வட நோர்வேயில் புற்று நோய், மூளையில் கட்டிவளர்தல் போன்ற விபரீதமான வியாதிகளைத் தந்து மக்கள் பலரை அழுந்தச் செய்கிறது. ஒன்றாய் இருந்த உலகை எல்லைபோட்டுப் பிரித்த மனிதனால் வானத்திற் கும், வளிக்கும் ஏன் வளியே புகா வண்ணம் எல்லைபோட முடியவில்லை? இப்போதாவது உலக நாடுகள் உணருமா? பொருளாதாரத்தில் மட்டுதல்ல சாவிலும் கூட ஒருவரில் ஒருவர் தங்கி தான் வாழவேண்டும்!என்பதை. எந்தவொரு எல்லைக்கோடுகளாலும் இப்படியான அழிவைத் தடுத்து விட முடியாது.

9) நோர்வேயில் முதியோர் பராமரிப்பு நிலையங்கள் வசதியின்மையும், சீர்கேடான நிலையுடனும் இருக்கின்றனவாம். ஆனால் சிறைச்சாலைகள் மட்டும் தனிக் குசினி, தனியறைகள், அழகிய மல சலகூடம், தொலைபேசி, தொலைக்காட்சி, பல சமிக்கைகளை தரக்கூடிய காபல் தொடர்புகள் என மிக மிக வசதியுடன் இருக்கின்றனவாம்? தண்டனைக்குரியவர்கள் சுகமனுபவிப்பதும், நாட்டின் நலனுக்காகத் தம்வாழ்வையே கொடுத்தவர்கள் கஸ்டங்களை அனுபவிப்பதும்முற்றிய கலியுகத்தின் விளைவுதான்!

10)டென்மார்க்கில் குடும்பவாழ்விலுள்ள ஓர் தமிழ் பெண்மணி, கல்லைக் கக்கி கையில் கொடுத்தாராம். அக்கல்லை வைத்து அம்மன் ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டதாம். அப்பெண்ணை, ஒஸ்லோவில் நடந்துவரும் சிவசுப்பிரமணியர் ஆலயத்திற்கு அழைத்துவந்து சுப்பிரமணியருக்குக் கும்பம் வைக்கும் தட்டத்தில் அப்பெண்மணியை நிற்கவைத்து, சுப்பிரணியருக்கு முன்னாலேயே நிர்வாகத்தின் அனுமதியுடன் பாலினால் பாதபூசை செய்தார்களாம். இறைவனைக் கல்லென்றோ அல்லது சிலையென்றே நினைத்தபடியால் தான் இவர்கள் இப்படிச் செய்திருக்கிறார்கள். மீதி அனைவரும் கைகட்டி வாய்பொத்தி மௌனியாய் நின்றார்களாம். இதைப் பார்த்து, கேட்ட பலர் 20ம் நூற்றாண்டுக் கணனி உலகில் வாழும் கற்கால மனிதர்கள் என அல்லவா குமட்டிச் சிரிக்கிறார்கள். கனடாவில் ஆதிகுடிகளுக்கெனத் தனியிடம் அமைத்துக் காட்சிக்கு விட்டதுபோல், கற்காலமனிதருக்கு நூதனசாலை அமைக்க வேண்டும் என்பது பலருடைய ஆசை.

— தி.திலீன்

www.tamilarangam.net

## தெரிந்த விஷயம்.. ஆனால்

# தெரியாத புதிய தகவல்கள்

ரஜினிக்கு
சிங்களராணுவகொடுமை

1996ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி ரஜினி என்ற 23 வயது இளமங்கை உரும்பிராய் வடக்கிலுள்ள தனது வீட்டிலிருந்து மானிப்பாயிலுள்ள தனது சிறிய தாயார் வீட்டிற்குச் செல்லத் துவிச்சக்கர வண்டியில் புறப்பட்டாள்.

பலாலி-யாழ்ப்பாணம் பிரதான வீதியின் மேற்குப் பக்கமாக நீண்ட மண்மேடாலான அரண் யாழ். பல்கலைக்கழக வளவு வரை செல்கிறது. இதனைத் தாண்டி மேற்குப்புறத்திலுள்ள இடங்களுக்குச் செல்வதானால் இராணுவத்தினரின் அனுமதிதேவை.

அரச பணியாளர், தனியார் துறையில் தொழில்செய்வோர் ஆகியவர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனையோர் வாரத்தில் ஒரு நாள்-திங்கட்கிழமை-மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

மானிப்பாய் நகர் மேற்குப் பக்கத்தில் இருந்தது. ஆகவே தான் திங்கட்கிழமையான அன்று ரஜினி புறப்பட்டாள். கோண்டாவிலில் இலங்கை போக்குவரத்து சாலைக்கு அருகில் அமைந்துள்ள இராணுவச்சாவடியூடாகவே மேற்கே செல்லமுடியும். அவ்வழியூடாக மானிப்பாய் சென்றாள். சிறிய தாயாரின் மானிப்பாய் வீட்டில் மாலை 3 மணிவரையில் தங்கிவிட்டு அங்கிருந்து உரும்பிராய் போக புறப்பட்டாள்.

மாலை 6 மணி ஆகிவிட்டது. உரும்பிராயிலுள்ள வீட்டிற்கு ரஜினி வரவில்லை. கோண்டாவிலிலுள்ள இராணுவச் சாவடியூடாக மாலை 5 மணிவரையும் தான் இந்தப் பக்கம் வரமுடியும். 6 மணிவரை வராததனால் மானிப்பாயில் தங்கிவிட்டாள் என்று பெற்றோரும் மாமனும் நம்பினர்.

"போனால் வருவதற்கு அங்கே ஏன் நிற்க வேண்டும். இனி அடுத்த திங்கட்கிழமை தானே வரமுடியும்" என மாமன் குறை கூறினார்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை (1-10-96) மானிப்பாயிலிருந்து வந்த இவர்களின் நெருங்கிய உறவினர் ஒருவர் ரஜினி முதல் நாள் மாலையே புறப்பட்டு வந்த தகவலைக் கூறவே பெற்றோர் அதிர்ச்சியடைந்தனர்.

கோண்டாவிலிலுள்ள இராணுவ சோதனைச் சாவடியில் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கவேண்டும் என முடிவு செய்து, ரஜினியின் தந்தையான வேலாயுதபிள்ளையும் மாமனுமாக இச்சாவடிக்குச் சென்று விசாரித்தனர்.

தாம் எவரையும் கைது செய்யவோ தடுத்து வைக்கவோ இல்லையென கோண்டாவிலில் உள்ள சோதனைச் சாவடிப் பொறுப்பாளர் கூறினார். தந்தையும் மாமனும் மேலும் அதிர்ச்சியடைந்தனர்.

இந்நிலையில் மேற்கொண்டு எங்கு விசாரிப்பது என்ன செய்வது என்ப்புரியாது விழித்த தந்தைவரும் வழியில் பலரிடமும் இது பற்றிக் கதைத்தார். அப்போது ஒரு தகவல் கிடைத்தது.

உரும்பிராயைச் சேர்ந்த ஒருவர், தான் திங்கட்கிழமை மாலை பலாலி வீதி வழியாக வரும் போது உரும்பிராய் தெற்கிலுள்ள வீதிக் காவலரண் ஒன்றில் ரஜினியை அங்கு கடமையிலிருந்த இராணுவச் சிப்பாய்கள் மறித்து விசாரித்ததைக் கண்டதாகக் கூறினார்.

தந்தை சில உறவினர்களுடன் சென்று குறிப்பிட்ட காவலரணில் கடமையிலிருந்த இராணுவச் சிப்பாய்களிடம் விசாரித்தபோது அவர்கள் தமக்கு எதுவுமே தெரியாது எனக்கையை விரித்தனர்.

ஒரு வாரமாகத் தந்தையும் உறவினர்களும் திருநெல்வேலி, புன்னாலைக்கட்டுவன் முதலான பல இராணுவ முகாம்களுக்குச் சென்று விசாரித்தனர். பலனில்லை. எல்லோரும் தமது முயற்சியில் சோர்ந்து விட்டனர்.

இதே நேரத்தில் வேறுபல புதிய தகவல்கள் வெளியாகத் தொடங்கின. செப்டம்பர் 30ஆம் திகதி உரும்பிராய் தெற்கிலுள்ள காவலரணில் விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது தமது சமயோசித புத்தியால் நான்கு இளம் பெண்கள் தப்பி வந்திருந்தனர். இக்காவலரணில் சோதனையிட வேண்டும் என்று அழைக்கப்பட்ட போது இங்கு பெண் பரிசோதகர் இல்லாததினை அவதானித்த இப்பெண்கள் சோதனைக்கு உட்பட மறுத்து ஓடி வந்து விட்டனர்.

ஒரு 16 வயது இளம் பெண் தமது துவிச்சக்கர வண்டியையும், கைப்பையையும் கூட அங்கே விட்டுவிட்டு ஓட்டமாக ஓடி வீடு வந்துசேர்ந்தார். பின்பு இவரின் தந்தை சென்று அவற்றை மீட்டு வந்தார்.

இத்தகவல்கள் வெளியானதும் இக் காவலரணில் தான் ரஜினிக்கு ஏதோ நடந்திருக்கவேண்டும் என்பது புலனாயிற்று. உரும்பிராய் வடக்குப் பகுதியைச் சேர்ந்த மக்கள் அனேகர் கூடி இதுபற்றி ஆராய்ந்ததன் முடிவாக எல்லோருமாகச் சென்று கோண்டாவிலில் உள்ள இராணுவ முகாம் பொறுப்பாளரிடம் நீதிகேட்பதென முடிவாயிற்று.

7-10-96 திங்கட்கிழமை வயது முதிர்ந்த அனைவரையும் ஒன்று கூடும்படி கோரி அறிவித்தல் வீதிதோறும் ஒட்டப்பட்டது. அன்று காலை 9 மணிக்குப் பலர் கூடினர். கூட்டம் ரஜினியின் தந்தையின் தலைமையில் கோண்டாவில் இராணுவமுகாம் சென்றது. பொறுப்பாளரிடம் கோரிக்கை மனு கையளிக்கப்பட்டது.

இம்மனு உடனே அச்செழுவிலுள்ள 51ஆவது படையணித் தலைவர் ஜானகபெரேராவிடம் கையளிக்கப்பட்டது. புலனாய்வுத் துறையினர் உடனடியாகவே விசாரணைக்கு அமர்த்தப்பட்டனர்.

காவலரணில் கடமையில் இருந்தவர்களை அடையாளம் கண்ட சிலரிடம் அவர்களின் அங்க அடையாளங்களைப் பெறும் வாக்குமூலங்கள் அவரால் இரகசியமாகப் பெறப்பட்டன. பகிரங்கமாக வாக்குமூலமளிக்க எல்லோரும் அஞ்சியதனால் இவ்வாறு தனித்தனியே இரகசியமாகப் பெறப்பட்டன.

இவற்றின் அடிப்படையில் அன்று மாலையே 4 சிப்பாய்கள் கைது செய்யப்பட்டனர்.

ஆனால் சிலதினங்கள் எதுவித தகவலுமின்றி அமைதியாகவே கழிந்தன. ரஜினி உயிருடன் இருக்கிறாளா? இல்லையா? என்பதனை அறியும் ஏக்கத்துடன் பெற்றோர் தவித்தனர்.

இக் கால கட்டத்தில் ஒரு நெஞ்சை நெகிழவைக்கும் சம்பவம் ஒன்று. ரஜனி காணாமற்போனதற்கு மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை, உரும்பிராய் வடக்கு பேய்ச்சியம்மன் ஆலயத்தில் பூசகர் பூசைக்கான ஆயத்தங்கள் யாவற்றையும் முடித்து விட்டு யாரையோ எதிர்பார்த்தபடி பூஜையை நடத்தாமல் தாமதம் செய்துகொண்டிருந்தார்.

ரஜினி, செவ்வாய், வெள்ளி தினங்களில் ஆண்டாள்மாலை கட்டிக்கொண்டுவந்து அம்மனுக்குச் சாத்துவது வழக்கம். அன்று ரஜினி வராததனால் அவர் வரத்தாமதமாவதாக நினைத்து பூசகர் அவர் வரும்வரை தாமதித்தார். தாமதம் செய்வதற்கான காரணத்தைச் சில பக்தர்கள் விசாரித்தபோது பூசகர் இதனைக் கூறினார். ரஜினியைக் காணவில்லை என்ற சேதி வெளியிடப்பட்டபின்பு, பூசை ஆரம்பமாகியது. இச்சம்பவம் அனைவரினதும் நெஞ்சை விட்டகலாத நிகழ்வாகி விட்டது.

12.10.96 சனிக்கிழமை காலையில் ஒரு திருப்பம். உரும்பிராய் தெற்கு பலாலி வீதியில் உள்ள ஒரு வீட்டிற்கு துப்பறியும் நாய் கொண்டுவரப்பட்டது. அங்கே ஒரு இடத்தையடைந்ததும் நாய், அங்கு சுற்றிச் சுற்றி வந்து குரைத்தது. அங்கே தான் ரஜினியின் இறந்த உடல் இருக்க வேண்டும் என்று புலனாய்வாளர்கள் தீர்மானித்திருக்க வேண்டும்.

காலை 8 மணி ரஜினியின் பெற்றோர் ஒரு பொது இடத்திற்கு அழைக்கப்பட்டனர். அவர்களிடம் சில தகவல்கள் அடங்கிய வாக்குமூலம் பெறப்பட்டது.

நண்பகல் வேளை உருக்குலைந்த நிலையில் ரஜினியின் உடல் வெளியே எடுக்கப்பட்டது. யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு மறுநாள் விசேட விமானமூலம் பிரேதபரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பப்பட்டது.

தொடர்ந்து தேடுதல் நடாத்திய புலனாய்வாளர்கள் ரஜினி அணிந்திருந்த உடைகள், நகைகள், அணிகலன்கள், பயன்படுத்திய துவிச்சக்கரவண்டி ஆகியவைகளையும் கைப்பற்றினர். துவிச்சக்கரவண்டி பகுதிபகுதியாகப் பிரிக்கப்பட்டுப் புதைக்கப்பட்டிருந்தது.

### தந்தைக்கு வந்த கடிதம்

51வது படையின் தளபதி திரு.ஜானக பெரேராவிடமிருந்து திரு.வேலாயுதபிள்ளைக்கு ஒரு அனுதாபக் கடிதம் கிடைத்துள்ளது. கடிதத்தில் வாசகங்கள் வருமாறு இருந்தது:

"தங்கள் 4-10-96 திகதிக் கடிதம் கிடைக்கப் பெற்றேன்.

உங்களுடைய விடயம் தெரிய வந்தவுடன் எமது இத்தலைமையகம் ஆரம்ப நடவடிக்கையில் உடன் இறங்கியது. காணாமற் போன தங்கள் மகளின் இறந்த உடல் மீட்கப்பட்டுள்ளது என்பதனை ஆழ்ந்த வேதனையுடன் அறியத்தருகிறேன்.

நானும் ஒரு தந்தை என்ற வகையில் உங்கள் வேதனையையும் துயரத்தையும் உணர்கிறேன். அந்த வேதனையையும் துயரத்தையும் எனது ஆறுதல் வார்த்தைகளினால் குறைக்க முடியாது என்பதனை நான் அறிவேன்.

இக் கொடூரமான செயலுக்குக் காரணமாக இருந்தவர்கள் கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கப்படுவதற்கு என்னாலான சகலதையும் செய்வேன். இப்படியான வேதனையும் துன்பமும் வேறு எந்தப் பெற்றோர்களுக்கும் இனி ஏற்படாது தடுக்க ஆகவேண்டிய ஏற்பாடு செய்துள்ளேன்."

தகவல்: பழையூர் சுந்தரம்பிள்ளை.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# C-BLAD

சர்வதேசதமிழர்

Editor:N.S.Pirabu,B.Sc.,Dip.Journalism(U.K.)
L.Hervigs vn.69A,3035 Drammen,Norway.
Tl./Fx.32.813416;E.mail:nsp@oslonett.no

Subscription/yr/6 issues:: Scandinavia:90,-NKr; other countries::15 USD **Nov-Dec.1996**

Po 05320899453 ,Postbanken,0021 Oslo Bankgiro:6066 1012 199,kredit kassen bank,3000 Drammen

*Norges Tamiltidsskrift for informasjon,kunnskap,kultur og solidaritet .*


**சர்வதேசதமிழர் 1996 கார்த்திகை-மார்கழி.தொ.3 இல.6**

## ஆசிரியர் கருத்து:

### தமிழரும் குமுதமும்!

தமிழகத்தில் பிரபலமான சஞ்சிகைகளில் குமுதம் இதழும் ஒன்று. அமரர்,மதிப்புக்குரிய எஸ்.ஏ.பி. அண்ணாமலை அவர்களால் 1946ல் நிறுவப்பட்ட இவ்விதழ் இன்றும் தமிழ்மக்கட்கு அறிவும்,மகிழ்வும் ஊட்டிவருவது பாராட்டக்கூடியது, தமிழகத்தமிழர் மட்டுமன்றி,உலகெங்கும் வாழும் ஈழத்தமிழர்களும் வாசிக்கும்,நேசிக்கும்,பெருமைப்படும் இதழாகஇவ்விதழ்,விளங்குகிறது அதுபோல் எதிர்காலத்திலும் விளங்கவேண்டும் என்பதே எம் ஆவல். அண்மையில் குமுதம் ஆசிரியரால் எழுதப்பட்ட ஆசிரியர் கருத்தில்–ஈழத்தமிழர் விவகாரம் ஒருஅயல் நாட்டுவிவகாரம்!அவர்கள் துன்பப்படுகிறார்களோ?மகிழ்ச்சிகொள்கிறார்களோ?அது அவர்களது பிரச்னை. நம்முடைய கவலை எல்லாம் தமிழ் நாட்டைப்பற்றித்தான்!–என்று எழுதியமை ஈழத்தமிழர்களின் உள்ளத்தில்,வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போன்ற துன்பமான உணர்வை ஏற்படுத்தியுள்ளது. பாலஸ்தீனருக்காக,பொஸ்னியருக்காக,செச்னியருக்காக,யூதருக்காக,குர்திஷ்மக்களுக்காக,தென்ஆபிரிக்கசுறுப்பருக்காக,குவைத்விடுதலைக்காக உலகமே குரல் கொடுத்தது. இந்தியாவும் சேர்ந்தே குரல்கொடுத்தது.அவற்றை யாரும் அயல்நாட்டுவிவகாரம் தானே,என ஒதுக்கவுமில்லை.மறக்கவும் இல்லை. அண்மையில் ஆந்திராவில் வெள்ளம் வந்ததற்கு அயல்மாநிலம் தானே என்று கருதாது,குமுதம் தன் கவலையை ஆழமாகத் தெரிவித்தமை,தமிழர்,மனதைதொட்டது மொழி,பண்பாடு,இனம்,வரலாறு ஒற்றுமையில் பிரிக்கமுடியாத தொப்புள் கொடி உறவை தமிழகதமிழர்கட்கும்,ஈழத்தமிழர்கட்கும் தமிழன்னை வழங்கியுள்ளாள்.அது என்றும் தொடரும்.

தமிழ்நாட்டில் நாம்தமிழர்,என்ற உறவு வளரவேண்டும்.ஈழத்தமிழர்க்கு நீதி,அமைதி,சுயநிர்ணயஉரிமை வேண்டி தமிழ்நாடு மத்தியஅரசிடம் துணிவாக,வீரமாக வேண்டவேண்டும்.மத்தியஅரசு சிங்களஅரசை அடிபணியவைக்கவேண்டும்.இதற்கு குமுதம் போன்ற இதழ்கள் பங்களித்து உதவுவது,மனிதகடமை!

## வாசகர் கடிதம்

**அன்பின் ஆசிரியருக்கு**

சர்வதேசதமிழர் இதழ் நண்பர் ஒருவர் மூலம் கிடைத்து வாசித்து அகமகிழ்ந்தேன்.நோர்வேயிலிருந்து இப்படி ஒரு இதழா!என வியந்தேன்.நோர்வே மற்றும் உலக தமிழர் விடயங்கள் சுவையாக இருந்தன.தொடர்ந்து இதழைப் பெறவிரும்புகிறேன்.உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழர்வாழ்வு,புதினங்கள் ஆர்வமூட்டுபவை. நியுசிலாந்து புதினங்களை அவ்வப்போது எழுதவுள்ளேன்.நன்றி!

**தி.திருநந்தகுமார்,நியுசிலாந்த்**

**அன்புள்ள ஆசிரியருக்கு,**

சர்வதேசதமிழர். ஒழுங்காக கிடைத்துவருகிறது.மிகவும் நன்றி! பின்லாந்தின் தேசியகாவியமான–கலேவலா–வை தமிழில் மரபுக்கவிதையாக மொழிபெயர்த்து வெளியிட்டிருந்தோம்.ஹெல்சிங்கி பல்கலைக்கழகமும்,பின்லாந்து இலக்கியமன்றமும் கல்விஅமைச்சின் உதவியுடன் ஹொங்காங்கில் இதனை அச்சிட்டனர். இத்துடன் ஒரு பிரதியை அன்பளிப்பாக அனுப்புகின்றேன்.சாதாரண மக்கள், மாணவருக்கு பயன்படக்கூடியதாக 1997–98ல் உரைநடையாக இதனை வெளியிடவுள்ளோம்..

**ஆர்.சிவலிங்கம் (உதயணன்) பின்லாந்த்.**

The Alternative Press,PB.47141,
Hong Kong.(Publisher)
The South India Saiva Sithantha Works,Publ.Soc.Tinnavely ltd
154,T.T.K.Salai,Alwarpet,Madras 600 018,India(Distributor/SL,India)

**அன்பின் ஆசிரியருக்கு**

சர்வதேச தமிழர் ஏடு வாழ்க! இத்தாலி,தலைநகர் ரோம் வந்தபின் மலேசியா திரும்புமுன் இந்த வாழ்த்தை சர்வதேசதமிழரைப் பாராட்டி,ரோமிலிருந்து அனுப்புவதில் மகிழ்வடைகிறேன்.சிறந்த தமிழ்ஏடான,அதனை எமக்கு தொடர்ந்து அனுப்பிஉதவுமாறு வேண்டுகிறோம்.தங்கள் சேவையை பாராட்டி வாழ்த்துகிறோம்!நன்றி! அன்புடன்,

**பேராசிரியர் இர.ந.வீரப்பன்**

**அன்புள்ள ஆசிரியருக்கு,**

முன்பு வெளியான யோகர்சுவாமிகள் வரலாறு,தேரடி செல்லப்பா சுவாமிகள் பற்றி சர்வதேசதமிழரில் வாசிக்கும்போது பிரமிப்பு ஏற்படுகிறது. தமிழ்பெரியார்கள் வரலாறு மனதில் நிம்மதி,திருப்தியை,ஏற்படுத்துகிறது

**ஐ.ரி.இரவீந்திரன்,நோர்வே**

## சர்வதேசதமிழர்தகவல்சேவை

**The EEA agreement includes all the EU countries and the EFTA countries Norway, Iceland and Liechtenstein. It entered into force on 1 January 1994.**
**The EEA agreement includes the following points:**

- duty-free trade in industrial goods
- free movement of capital
- free movement of persons
- introduction of EU rules concerning trade in services
- liberalization of trade in fish and agricultural products
- common rules for state aid to industry
- common rules for public procurement
- common product standards and documentation, approval and inspection arrangements
- free right of establishment for enterprises and harmonization of company law throughout the EEA
- rapid incorporation of new EU rules into Norwegian law
- Norwegian participation in EU framework programmes for small and medium-sized enterprises, research and education
- mutual recognition of diplomas and qualifications


Abonnement- SARVADESA TAMILER
L.Hervigs vei.69A,3035 Drammen,Norway
NAVN:
ADRESSE:
Signatur
1års abonnement:90,-NKR.Inst.abonnement:120,-NKr




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்